ஸ்ரீ சங்கர பக்தஜன சபா

மேற்கு மாம்பலம், சென்னை-33.



குரோதி (1964) ஆண்டு

ஸ்ரீ சங்கர ஜயந்தி விழா மலர்.

வேத பாராயண சபையின் காரியக்ரமங்கள்

1 ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் பரிபூரண அநுக்ரஹத்தால் லோக க்ஷேமார்த்தமாய், மேலமாம்பலம் ஸ்ரீசங்கரமடத்தில் மேற்படி சபையால் கிருஷ்ண யஜுர் வேத பாராயணம் கடந்த நான்கு வருட காலமாய் தினந்தோறும் மாலையில் 6-30-முதல் 7-30 வரை 10-உத்தம வேதவித்வான்களால் நடைபெற்று வருகிறது.

2 மாதம் முதல் தேதியும், பிரதோஷ தினங்களிலும் பாதுகைக்கு விசேஷ பூஜையும், தீபாராதனையுடன் சம்பாவனை செய்யப்படுகிறது.

3 இந்து மதத்திற்கு ஆணிவேரான வேதங்களை அர்த்தத்துடன் அடிக்கடி மகா பண்டிதர்களைக் கொண்டு உபன்யாஸம் செய்யப்படுகிறது.

4 ஒவ்வொரு வருடமும் கார்த்திகைமாத மண்டலவாரம் ஒவ்வொரு ஆஸ்திகர்கள் வீட்டிலும்போய் பாராயணம்செய்யப்படுகிறது.

5 ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதத்தில் ஆண்டு விழாவின் போது 10நாட்கள் வைதிக மார்க்கமான ஹோம-யக்ஞங்களும் சிறந்த பண்டிதர்களைக் கொண்டு உபன்யாஸமும் செய்யப்படுகிறது. அச்சமயம் சபையின் வேதபண்டிதர்களையும் கௌரவிக்கப்படுகிறது.

6 ஷை சபை ஆஸ்திகர்களின் உதவியால் நடைபெற்றுவருகிறது.

குரோதிஸு சித்திரை மீ
முதல் தேதி.

நடராஜ சர்மா,
காரியதரிசி.

ஸ்ரீ சங்கர பக்த ஜன சபா,

மேற்கு மாம்பலம், சென்னை-33.

குரோதி (1964) ஆண்டு

சங்கரஜயந்தி விழாமலர்.

விஷய அட்டவணை.

பொருள்.		பக்கம்.
ஸ்ரீ ஜகத்குருவின் ஸ்ரீமுகம்		
ஸ்ரீ குருவந்தனம்	....	1
நமது சபை லக்ஷியமும், வளர்ச்சியும்	....	9
ஸ்ரீ சங்கரபகவத்பாத விஜயம்	...	17
காமகோடிபீடம் (ஒரு அனுபந்தம்)	...	43
உபதேச பஞ்சகம்	...	50
ஷட்பதி	...	54
மனோநியமனம்	....	57
ஸ்ரீ லலிதா பஞ்சரத்னம்	....	65
காலபைரவாஷ்டகம்	...	70
ஸ்ரீ சங்கர பஞ்சரத்னம்	....	77
ஸ்ரீ மனீஷா பஞ்சகம்	....	79
மாயா பஞ்சகம்	....	85
சிவானந்தலஹரீ	....	89
பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் சிவானந்தலஹரீ பாராயண ச்லோகங்கள்	}	179
ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதர்	....	185
நன்கொடையாளர்கள் ஜாபிதா		

உ

ஸமர்ப்பணம்.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர்களின் வாழ்க்கை வரலாறு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை இதுவரை அலங்கரித்த யதீஸ்வர்களின் பெயர் வரிசை, சிவானந்த லஹரீ 100 சுலோகங்கள், மற்றும் உபதேச பஞ்சகம், மனீஷா பஞ்சகம், லலிதா பஞ்ச ரத்னம், காலபைரவாஷ்டகம், ஷட்பதி, மனோ நியமனம், மாயா பஞ்சகம் முதலியவைகளும் அடங்கிய இந்த புத்தக மலரை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகளின் மலர்த் திருவடிகளில் பக்தியுடன் சமர்ப்பிக்கிறோம்.

இங்ஙனம்,

ஸ்ரீ சங்கர பக்தஜன சபா.

நமது சபை லக்ஷியமும் வளர்ச்சியும்

(ஆங்கீரஸ, S. வேங்கடேச சர்மா)

சென்ற ஆண்டு சங்கர ஜயந்தி மலரிலே நமது சபையின் வரலாறு விவரமாகக் கூறப்பட்டதாகலின் விரிவஞ்சி மீண்டும் கூறவில்லை. ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் ஸ்தாபித்த உண்மையையும், அவர்கள் அருளிய கிரந்தங்களையும், அவர்களது திவ்ய சரித்திரத்தையும் பிரவசனங்கள் மூலமும், புத்தக வெளியீடுகள் மூலமும் பிரசாரம் செய்வதும் ஸ்ரீ பகவத் பாதர்கள் வகுத்துக் காட்டிய வழிகளிலும், அவர்கள் ஸ்தாபித்த காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அனுக்ரஹிக்கும் முறையிலும், தர்மப் பிரசாரம் செய்வதும் நமது சபையின் லக்ஷியங்கள் என்பதைமட்டும் இங்கு திரும்பக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த லக்ஷியங்களை நிறைவேற்ற இச் சபை என்ன செய்தது என்பதை எடுத்துக் காட்டுவதுமட்டுமே இப்பொழுது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சென்ற ஆண்டு சங்கர ஜயந்திவரையில் பிரவசனங்கள் நடைபெற்றதை சென்ற ஆண்டு மலரிலே வெளியிட்டு வழங்கியதை ஆஸ்திகர்கள் அறிவார்கள். அதன் பிறகு சென்ற ஆண்டு சங்கர ஜயந்தி விழா மிகச் சிறப்பாக 3—5—1963 முதல் 8—5—1963 வரை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ பகவத்பாதர்கள் திருப் பாதுகைகளுக்கு அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை, தீபாராதனை முதலியவற்றுடன் கீழ்க் கண்ட உபன்யாசங்களும் நடைபெற்றன.

3—5—63 உபதேச பஞ்சகம் :—பாஷ்ய பாவக்ஞ
பிரம்மஸ்ரீ வரஹூர் கல்யாணசுந்தர
சாஸ்திரிகள்

4—5—63 ஷட்பதி, மனோநியமனம் — சாஸ்த்ர ரத்னாகரம்
பண்டிதராஜ பிரம்மஸ்ரீ போலகம் ஸ்ரீ ராம
சாஸ்திரிகள்

5—5—63 லலிதா பஞ்சரத்னம் :- மஹாமஹோபன்யாஸி
சாஹித்ய வாங்முக பூஷணம் பிரம்மஸ்ரீ
ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா அவர்கள்

6—5—63 கால பைரவாஷ்டகம் :— ,, ,,

7—5—63 மனீஷா பஞ்சகம் : 'ஞான பாஸ்கரபண்டித'
பிரம்மஸ்ரீ P. N. நாராயணசாஸ்திரிகள்.

8—5—63 மாயா பஞ்சகம் :
பிரம்மஸ்ரீ K. P. மஹாதேவ சாஸ்திரிகள்

மேற் கூறிய ஸ்தோத்திரங்கள் யாவும் இம்மலரிலேயே வெளியிடப்பட்டுள்ளதை ஆஸ்திகர்கள் காணலாம். ஷை விழாவின்போது 5-5-63 ஞாயிறு காலை ஸ்ரீ ஜகந்நாத அய்யர் அவர்களின் ஸ்ரீ ஆச்சாரியாள் வாழ்க்கை வரலாறு பற்றிய கண்காட்சியும், மாலை 4-மணி முதல் 6-30-வரை ஸ்ரீ காமாக்ஷி தாஸர் பிரம்மஸ்ரீ R. சோமசுந்தரம் அய்யர் அவர்களால் தமது கடற்கரை எஸ்டேட் முருகன் திருவருட்சங்க கோஷ்டியுடன் ஸ்ரீ ஜகத்குரு திருப்புகழ் பஜனையும் நடைபெற்று பல ஆஸ்திகர்களும் இவைகளில் கலந்து கொண்டார்கள்.

ஆசார்ய சேவையில் ஒரு அங்கமாக ஆசார்ய பக்தர்களைக் கௌரவிப்பது என்ற முறையில் பிரம்மஸ்ரீ பண்டிதராஜ போலகம் ஸ்ரீ ராம சாஸ்திரிகளுக்கு 'பண்டிதராஜ' என்ற பட்டம் கொச்சி மகாராஜாவினால் வழங்கப்பட்டதைப் பாராட்டி, 9—5—63ல் ஒரு விழா நடத்தப்பட்டது. பிரம்மஸ்ரீ தர்மா ரக்ஷாமணி K. பால சுப்ரமண்ய ஐயர் அவர்கள் தலைமை வகித்து ஸ்ரீ சாஸ்திரி

களின் வித்யை, குணம், ஆசார்ய பக்தி முதலியவைகளை மிகவும் பாராட்டிப் பேசினர்கள். மற்றும் ஸ்ரீமான்கள் வரஹூர் கல்யாணசுந்தர சாஸ்திரிகள், K. M. சுப்ர மண்யம், ராவ்சாஹிப் V. சின்னசாமி அய்யர் முதலிய வர்களும் பாராட்டிப் பேசினர்கள். வெங்களத்தூர் ஸ்ரீ மணிசாஸ்திரிகள், ஆங்கிரஸ S. வேங்கடேச சர்மா இவர் களால் பாராட்டுப் பத்திரங்கள் படித்து அளிக்கப்பட்டு, நமது சபையின் சார்பிலும், வைதிக தர்மவர்த்தனீ பத்தி ரிகை, மாம்பலம் குருகுலம் இவைகளின் சார்பிலும் சால்வைகள் போர்த்தப்பட்டன. அந்நிகழ்ச்சிகளில் இரண்டு காட்சிகளை இம்மலரில் காணலாம்.

குழந்தைகள், (சிறியவர்களும், பள்ளிக்குச் செல்பவர் களும்) ஸ்ரீ சங்கர பகவத்பாதர்களின் ஸ்தோத்திரங்களைப் பயில ஓர் ஊக்கம் அளிக்கவேண்டி ஸ்தோத்திரங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்வருஷமும் இதை இன்னும் சிறந்த முறையில் நடத்தத் தீர்மானித்திருக்கிறோம்.

ஸ்ரீ சங்கர ஜயந்தியைத் தொடர்ந்து 10—5—1963 அனுஷநக்ஷத்திரம் கூடிய நன்னளில் ஸ்ரீ பகவத் பாதர் களின் புனர் அவதாரமென்று பக்தர்களால் வணங்கப் படும் நமது காமகோடி பீடம் ஜகத்குரு பரமாச்சாரிய ஸ்வாமிகளுடைய ஜன்மநக்ஷத்திரம் ஆயுஷ் ஹோமம் நம் சபையின் சார்பில் நடத்தப்பட்டது. இந்த ஹோமம் நடைபெறத் தேவையான நெய் வழங்கியும், வைதிக சம்பாவனைக்காக நன்கொடை வழங்கியும், ஹோமத்தில் கலந்துகொண்ட பிராம்மணர்களுக்கு மிகச் சிறப்பான முறையில் சந்தர்ப்பணை நடத்தியும் உதவி புரிந்த ஸ்ரீ பின்னி K. சுப்ரமண்ய ஐயர் அவர்களுக்கு இந்த சபை தன்னுடைய நன்றியை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்

கொள்கிறது. அன்று மாலை ஸ்ரீவத்ஸ S. ஜயராம சர்மா, M. A., அவர்களால் 'ஆசார்ய மஹிமை' என்ற உபன்யாஸம் மிகச் சிறப்பாக நடந்தது.

சங்கர ஜயந்தி விழாவுக்குப் பிறகு ஆசார்ய க்ரந்த ஞான யக்ஞத்தைத் தொடர்ந்து நடத்தும் முறையில் 19—5—1963 ஞாயிறன்று ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா அவர்களின் 'சிவானந்த லஹரீ' பிரவசனம் ஆரம்பிக்கப் பட்டது. இவ் விழாவைச் சிறந்த தார்மிகரும் ஆஸ்திகருமான ஸ்ரீ K. M. சுப்ரமண்யம் அவர்கள் தலைமை தாங்கி ஆரம்பித்துவைத்தார் என்பதும், பம்பாய் பாரதிய வித்யாபவன் ஆசார்ய ஸ்ரீ T. A. வேங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் இதில் கலந்துகொண்டு சிவானந்த லஹரீயின் சிறப்புப் பற்றி பிரவசனம் செய்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விஷயமாகும். இப் பிரவசனத் தொடர் ப்ரதி ஞாயிற்றுக்கிழமையும் ஒரு தபஸ்போல் தொடர்ந்து நடந்து 5—4—1964 ஞாயிறு அன்று இறைவன் திருவருளால் சிறப்பான முறையில் பூர்த்தியடைந்தது. இப் பூர்த்தி விழாவிற்கும் ஸ்ரீ K. M. சுப்ரமண்யம் அவர்கள் தலைமை வகித்தார்களென்பது மற்றுமொருகுறிப்பிடத்தக்க விஷயமாகும். இவ்விழாவில் Dr. T. M. P. மஹாதேவன் அவர்கள் கலந்துகொண்டு, சிவானந்தலஹரீ பற்றிச்சிறப்புரை யாற்றினர்கள். பிரம்மஸ்ரீ வரஹூர் கல்யாணசுந்தர சாஸ்திரிகள், P, N. நாராயணசாஸ்திரிகள், ராவ்சாஹிப் V. சின்னசாமி ஐயர் அவர்கள் ஆகியோர் உபன்யாஸ கர்த்தாவான பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்களையும், நமது சபையின் முயற்சியையும் பாராட்டிப் பேசினர்கள். ஸ்ரீ சர்மா அவர்களுக்குக் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அனுக்ரஹித்த ருத்ராக்ஷத் தோடா ஒன்று மடத்துப் பிரதிநிதி ஸ்ரீ P. N. வேங்கடேச அய்யர் அவர்களால் வழங்கப்பட்டது. ஸ்ரீ வைத்திய சுப்ரமண்ய ஐயரவர்கள்

ஸ்ரீ சர்மா அவர்களைப் பாராட்டி செய்தி அனுப்பியதுடன் சம்பாவனையும் அனுப்பினார்கள். நமது சபையின் சார்பாக வெள்ளிப் பாத்திரம் ஒன்று பக்தர்கள் உதவியுடன் சமர்ப்பிக்கப்பட்டது. மிகச் சிறந்த முறையில் பிரவசனப் பூர்த்தி விழா முடிவடைந்தது ஸ்ரீ ப்ரமாச்சாரியர்களின் அனுக்கிரஹத்தாலேயே என்பது முக்காலும் மறுக்க முடியாத உண்மை. இவ் விழாவின் இரண்டு காட்சிகளையும் இம்மலரில் காணலாம்.

சபையின் இதர நிகழ்ச்சிகள்.

1. 9—10—1963 முதல் பிரதி திருவாதிரை தினத்தன்றும் ஸ்ரீ பாதுகைகளுக்கு மாலையில் மந்த்ர புஷ்ப சகிதம் விசேஷமான தீபாராதனையும், உபன்யாசமும் நடைபெறுகிறது.

2. கார்த்திகைமாதக் கடைசி ஸோமவாரத்தன்று (9—12—1963) லக்ஷதீபம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்று சோமவார விரத மஹிமைப் பற்றி அரிய உபன்யாசமும் ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்களால் நடைபெற்றது. இன்னும் சில முக்கிய தினங்களில் தீபாராதனை நடத்தவேண்டும் என்பதும் தீர்மானத்தில் இருக்கிறது.

3. ஸ்ரீ மடத்தில் தனுர்மாதத்தில் ஒருநாள் பூஜை கட்டளையை நமது சபை மேற்கொள்கிறது. இவ் வருடம் முதல் தினசரி பூஜைகட்டளையிலும் மாதம் ஒருநாள் நமது சபை பங்கெடுத்துக்கொள்ள 1964 எப்ரல் முதல் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4. ஸ்தாபகரின் இல்லத்தில் 'ஸ்ரீ சங்கர வித்யா நிகேதனம்' என்ற பெயரில் குழந்தைகளுக்கு ஸ்தோத்திர வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆக நமது சபை பூஜை,

தீபாராதனை, பிரவசனம் முதலிய சகல ரூபத்திலும் ஸ்ரீ ஆசாரியாளை ஆராதிக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறது.

நமது எதிர்காலத் திட்டங்கள்.

நமது மேல மாம்பலம் ஸ்ரீ சங்கரமடத்தில் செய்வது போலவே இந்நகரின் பலபாகங்களிலும் தகுந்த பண்டிதர்களைக்கொண்டு ஸ்ரீ ஆசார்யாளின் கிரந்தங்களைப் பிரவசனம் செய்விக்க வேண்டும் என்பது நமது முக்கியத் திட்டம். ஆரம்பத்தில் மேல மாம்பலம், காமாக்ஷிபுரம், தியாகராய நகரில் ஒன்று அல்லது இரண்டு இடங்கள், ஆகியவைகளில் ஆசாரிய கிரந்த ஞான யக்ஞம் நடத்த வேண்டும் என்பது ஆலோசனையில் இருக்கிறது. இறைவன் திருவருள் துணையும், ஸ்ரீ ஜகத்குரு பரமாச்சாரியாளின் அனுக்ரஹமும் இக்காரியத்தை முடித்துத் தர வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொள்கிறோம்.

முடிவுரை.

நமது சபையின் சென்ற ஆண்டு வரலாற்றினைச் சுருக்கமாக மேலே கண்டீர்கள். எதிர்காலத் திட்டத்தினையும் கண்டீர்கள். இம் முயற்சிகள் அனைத்திலும் ஆஸ்தீகர்கள் பங்குகொண்டு ஆதரிக்கவேண்டும். நமது சபையின் நிகழ்ச்சிகளில் எல்லாம் தவரூது கலந்துகொண்டும், வேண்டிய பண உதவி செய்தும் ஆதரிக்க வேண்டுமெனக் கோருகிறேன். இதுவரையிலும் சபையின் எல்லாக் காரியத்திலும் ஒத்துழைத்த பொது மக்களுக்கு மிகவும் நன்றி. இச் சபையின் கைங்கரியங்களுக்கு இடமளித்ததுடன் தங்களது தார்மீக ஆதரவையும் தந்து ஊக்கமூட்டிய ஸ்ரீ சங்கரமடம் டிரஸ்டிகளுக்கும், நமது சபையின் நிகழ்ச்சிகளில் எல்லாம் ஒத்துழைத்த வேதபாராயண சபைக்கும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாண்டு போஷகர்களாகப் புதிதாகச் சேர்ந்த தார்மீகப் புருஷர்களை வரவேற்கிறேன். அவர்கள் தங்களுடைய சர்வப் பிரகாரத்தாலும் இந்த சபையைப் போஷித்து வளர்க்குமாறு கோருகிறேன். புதிதாக அங்கத்தினர்களாகச் சேர்ந்தவர்களைப் பாராட்டுகிறேன். மேலும் அங்கத்தினர்களை வரவேற்கிறேன்.

இவ்வாண்டு நிர்வாஹத்தில் மிகவும் துணைபுரிந்து ஊக்கத்துடனும் உறுதியுடனும் செயலாற்றும் ஸ்ரீ V. S. குப்புஸ்வாமி, ஸ்ரீ M. S. அருணசலம் ஆகியவர்களுக்கும் இவ்வாண்டு சங்கர ஜயந்தி மலர் வெற்றிகரமாக வெளி வர பெரிதும் உதவி செய்த ஸ்ரீ C. G. சுப்ரமண்யம், ஸ்ரீ K. S. மணி ஆகியவர்களுக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகுக. இன்னும் பலவிதங்களில் நமது சபையின் நிகழ்ச்சிகளில் உதவி புரிந்தவர்களை எல்லாம் தனியாக வேறிடத்தில் பாராட்டியிருப்பதால் விரிவஞ்சி இங்கு குறிப்பிட வில்லை. எல்லோருக்கும் எனது நன்றி.

சமர்ப்பணம்.

இவ்வாண்டு மலர் ஜகத்குரு ஸ்ரீ பரமாச்சாரியர்களுடன் ஸ்ரீமுகம் தாங்கி வெளிவருகிறது. இந்த சங்கர ஜயந்தி மலரை அவர்களின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கும் பேறு பெற்றமைக்கு மிகவும் மகிழ்வெய்துகிறேன். அவர்கள் அருட்கடாக்ஷத்தினுல் நமது சபை மேலும் தொடர்ந்து தனது ஆசாரிய சேவையில் உறுதியுடன் ஈடுபடும் என்று உறுதி கூறுகிறேன்.

ஜய ஜய சங்கர !
ஹர ஹர சங்கர !!
சுபம்.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ சங்கர பகவத்பாத விஜயம்.

(ஞானபாஸ்கர பண்டிட் P. N. நாராயணசாஸ்த்ரிகள்)

श्रुति स्मृति पुराणानां आलयं करुणालयम् ।
नमामि भगवत्पाद शङ्करं लोकशङ्करम् ॥
जगतां गुरुवर्यञ्च कामकोट्यधिपं शिवम् ।
चन्द्रशेखर योगीन्द्र देशिकं समुपास्महे ॥

1. அவதாரம்

புண்ய பூமியாகிய நமது பாரத தேசத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்து பூமியின் பாரத்தைப் போக்கடித்து அர்ஜுனனை வ்யாஜமாக வைத்து ஸகல ஜனங்களுக்கும் ஆத்ம வித்யையான ஸ்ரீ கீதையை உபதேசித்தார். அந்த கீதையிலேயே அடிக்கடி வைதிக தர்மமானது குறைவுபடுமென்று கருதியே அம்மாதிரி வைதிக மார்க்கத்திற்குக் குறைவு ஏற்படும்போதெல்லாம் நானே அவதரித்து தர்மத்தை ஸ்தாபனம் செய்கிறேனென்று சொல்லியிருக்கிறார். அந்த ஸ்ரீ கிருஷ்ண பகவான் தன் ஸ்வரூபத்தை அடைந்த பிறகு உலகத்தில் விசேஷமாய் நமது பாரத தேசத்தில் அவைதிகமான நாஸ்திக பிரசாரங்கள் விசேஷமாகப் பரவி பௌத்தம், ஜைனம், காபாலிகம் கண்டதே காக்ஷி கொண்டதே கோலம் எனும் வகையில் விருத்தியடைந்து தர்மமார்க்கமும் அதற்குமூலமான வேதம் சாஸ்த்ரம் ஆத்மவித்யை இவைகள் மறையும் நிலையை அடைந்தன.

அம்மாதரி ஸமயத்தில்தான் நமது பகவத் பாதா சார்யாள் அவதரித்தார்கள்.

"கங்கையும் பிறையும் மற்றவு மறைத்து காலடியி னிலவதரித்து மங்கையாம் ஸரஸவாணியை ஜயித்து மதம் பலவற்றையுந் தொலைத்தே அங்கையின் நெல்லிக் கனியென விளங்க அத்வைத மதத்திணைத் தெரித்த சங்கர பகவத்பாதர் தம் பாதஸரோருகந் தலைக்கணியெமக்கே'' என்றபடி பிரம்மாதி தேவர்களால் உலகத்தில் உள்ள அதர்ம நிலையையும் அக்ஞான இருளையும் தெரிவித்து ப்ரார்த்திக்கப்பட்ட பரமேஶ்வரன் கைலாஸத்தைவிட்டு இந்த பாரத தேசத்தில் அவதரித்தார்கள். ஆனந்த கிரீய சங்கர திக்விஜயம், மாதவீய சங்கர விஜயம், சித்விலா ஸீய சங்கர விஜயவிலாஸம், சிவரஹஸ்யம் இவைகளில் அம்பிகையால் கேட்கப்பட்ட ஸ்ரீ பரமேச்வரன், கலியில் பாபத்தைப் போக்கி புண்யத்தையும் ஆயுளையும் விருத்தி செய்யக்கூடிய உத்தம சரித்திரத்தை சொல் கிறேன் என்று ஆரம்பித்து ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் அவதாரம், விஜயம் முதலிய சரித்திர விசேஷத்தை விஸ்தாரமாக உபதேசித்தார் என்று சொல்லப்பட்டிருக்கி றது. பிரம்மாதிகளின் பிரார்த்தனைக்கிணங்க நானே சங்கரராக அவதாரம் செய்யப் போகிறேன் என்று சொன்னபடி ஈச்வராவதாரமே ஸ்ரீ பகவத் பாதாள் என்பது ஸித்தமாகிறது. வேதத்தில் ருத்ரத்திலும் "வ்யுப்தகேசாயச'' என்கிற வாக்யமானது பரமேச் வரன் சிகையில்லாதவர் என்று சொல்கிறது. எந்த அவசரத்திலும் பரமேச்வரன் ஜடை இல்லாதவராகச் சொல்லப்படவில்லை. இந்த ருத்ர மந்த்ரத்திற்கு பாஷ்யம் எழுதிய ஒரு பெரியார் "शङ्कराचार्यरूपेण अवतरिष्य माणाय'' என்று சொல்லி இருக்கிறபடியால் இந்த மந்த்ரமானது பரமேச்வரனின் அவதாரமான

பகவத் பாதாளேயே குறிக்கிறது. பகவத் பாதர்கள் அவதார காலத்தில் பௌத்தம், ஜைனம் முதலிய நாஸ்திக மதங்களாலும் கர்மாவே பலனைக் கொடுக்கும், பலன் கொடுக்கும் ஈச்வரன் ஒருவன் அவசியமில்லே என்று சொல்லும் மீமாம்ஸம், ஸாங்க்யம் முதலிய ஆஸ்திக மதங்களாலும், லோகம் சிரமப் பட்டுக்கொண்டிருக்கும் ஸமயம், சஸ்திரம் முதலிய ஆயுதங்கள் ஒன்றுமில்லாமல் சாஸ்திரம் ஒன்றையே பலமாகக்கொண்டு அவதரித்தார்கள். பகவான் அவதரிக்கும் இடமானது சிஷ்டர்களும் ஆசாரமுமுள்ள இடமாயிருக்குமென்பது பிரமாணம். நமது ஆசார்யாள் அவதரித்த இடமான கேரளதேசத்தில் இருப்பவர்கள் ஸ்ருதி அனுஷ்டானங்களேயும் கர்மாக்களேயும் அந்தந்த காலங்களில் செய்வது இப்போதும் காணப்படுகிறது. அந்த கேரள தேசத்தில் காலடி என்னும் கிராமத்தில், வித்யாதி ராஜர் எனும் பிராம்மணோத்தமர் ஸகல வேத சாஸ்திர ஸம்பன்னராயும் சிஷ்டாசாரமுடையவராயும் இருந்து வந்தார். அவருடைய புத்ரர் சிவகுரு என்பவரும், பிதாவைப்போலவே எல்லா சத்குணங்களும் நிரைந்தவராயிருந்தார்.

சிவகுரு ஆர்யாம்பிகை என்னும் கன்னிகையை விவாஹம் செய்துகொண்டு கிருஹஸ்த தர்மத்தை நடத்தி வந்தார். அவருக்கு ஸர்வ ஸம்ருத்தியிருந்தும், புத்ரபாக்யமில்லாதவராய், கேரள தேசத்தில் உள்ள வ்ருஷாசலேச்வரரை ஆராதித்து, தபோனுஷ்டானம் செய்தார். பரமேச்வரன் அவருடைய ஸ்வப்னத்தில் தோன்றி, என்னுடைய அம்சபூதனும் ஸர்வக்ஞனும், லோகம் போற்றும் உத்தமனும், ஆனல் கொஞ்சமான ஆயுளேயுடைவனுமான புத்ரன் உண்டாவான் என்று அனுக்ரஹித்து மறைந்தார். அதிலிருந்து பரமேச்வரன் தேஜஸ்ஸையே கர்ப்பமாயடைந்த ஆர்யாம்பிகை, நந்தன வைசாக

சுக்ல பஞ்சமி ஆருத்ரா நக்ஷத்ரம் 5-கிரஹங்கள் உச்ச மான காலத்தில் குழந்தையைப் பெற்ருள். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர். சிவகுரு மகிழ்ச்சியுடன் குழந் தைக்கு ஜாத கர்ம நாமகரணங்களைச் செய்தார். உலகத் திற்கு க்ஷேமத்தை உண்டு பண்ணுவதற்காக ஆத்ரேய கோத்ரத்தில் அவதரித்த இந்தக் குழந்தையை சங்கரனென பெயரிட்டு அழைத்தனர். 3-வது வயதில் ஸகல பாஷை களின் ஞானமும், 4-வது வயதில் ஸகல சாஸ்த்ரங்க ளும் ஆசார்யாளை வந்தடைந்தன. இந்த ஸமயத்தில் பிதா வான சிவகுரு பூத சரீரத்தை விட்டு பிரம்மத்தில் கலந் தார். பிறகு தாயான ஆர்யாம்பிகை பந்துக்களைக் கொண்டு சங்கரருக்கு 5-வது வயதில் உபநயனம் செய் வித்து, வேத வித்யாப்யாஸம் செய்யும்படி அனுப்பினுள். வேத, வேதாந்த, வித்யைகள் எல்லாம் ஸாங்கமாய் ஆசார்யாளை வந்தடைந்தன.

2. கனகதாராஸ்தவம்.

பிறகு ஆசார்யாள் பிரம்மசர்ய ஆச்ரமத்தை உலகத் திற்கு அனுஷ்டித்துக் காட்டுவதற்காக, வீடு, வீடாக நுழைந்து, பிக்ஷை கேட்டு வந்தார்கள். ஒரு ஏழை பிராம் மணர் வீட்டில் போய் பிக்ஷை கேட்க, அந்த வீட்டு அம் மாள் தேஜஸ்ஸோடு கூடிய இந்தக் குழந்தைக்குப் போட ஒன்றுமில்லையே என்று தரித்ர நிலையை நினைத்து வருந்தி ஒரு மூலையில் கிடந்த நெல்லிக்கனி ஒன்றை பிக்ஷாபாத்ரத் தில் போட்டாள். இவர்களுடைய நிலையை உணர்ந்த நம் ஆசார்யாள் "अङ्गं हरेः पुलकभूषणमाश्रयन्ती" என்று ஆரம் பிக்கும், "கனகதாராஸ்தவம்" ஸ்தோத்திரத்தின் மூலம் ஸ்ரீ மஹாலக்ஷ்மியை பிரார்த்தித்து ஒரு முகூர்த்தகாலம் ஸ்வர்ண நெல்லிக்கனியாகவே வீடு முழுவதும் வர்ஷிக் கும்படிச் செய்து அந்த ஏழை ப்ராம்மணருடைய தரித்தி ரத்தைப் போக்கி ஸந்தோஷிக்கச் செய்தார்.

3. ஸங்யாஸம்.

ஸ்ரீ ஆசார்யாள் தன் 8-வது வயதில் ஸகல வேத சாஸ்த்ரங்களேயும் கலேகளேயும் அடைந்து ப்ரம்மவர்ச்சஸ்வியாக விளங்கிஞர்கள். தாயான ஆர்யாம்பிகை தன் புத்ரனுக்கு விவாஹம்செய்விக்க முயற்சித்தாள். ஆசார்யாள் துறவறமே மேற்பட்டதென்று வாதிக்க, தாயார் கிருஹஸ்தாச்ரமத்தை அவலம்பித்து தனக்கு த்ருப்தியளிக்கவேண்டுமென சொல்லி விவாதம் நடந்து வந்தது. ஒரு நாள் ஆசார்யாளும் தாயாரும் ஸ்ஞனத்திற்காக காலடியில் உள்ள சூர்ணி நதிக்குச் சென்று ஆசார்யாள், தாயாரை ஸ்ஞனம் செய்வித்து கரையேற்றி விட்டு பிறகு தான் ஸ்ஞனம் செய்தார்கள். அப்பொழுது ஒரு முதலே காலேப் பிடித்துக் கொண்டது. ஆசார்யாள் தாயாரைப் பார்த்து முதலே காலேப் பிடித்துக்கொண்டு விட்டது. இப்பொழுது எனக்கு ஸன்யாஸம் பெற அனுமதி கொடுத்தால் முதலே விட்டுவிடும். ஸன்யாஸத்தால் ஜன்மாவே மாறி விடுகிறபடியால். இந்த ம்ருத்யுபயம் நீங்கி விடும் என்று சொன்ஞர்கள். அதைக்கேட்ட தாயாரும் எப்படியாவது பிள்ளே பிழைத்தால் போதுமென்ற நோக்கத்துடன் ஸன்யாஸத்திற்கு அனுமதி கொடுத்தாள். உடனே ஆசார்யாள் ப்ரேஷாச்சாரணம் செய்து " अभयं सर्वभूतेभ्यो मत्तस्वाहा " என்பது முதலிய மந்திரங்களே உச்சரித்து, சிகை, யக்ஞோபவீதம் முதலியவைகளே விட்டு ஆபத் ஸன்யாஸமடைந்தார்கள். சாபத்திஞல் முதலேயாயிருந்த கந்தர்வன் ஆசார்ய பாத ஸ்பர்சத்திஞல் சாபம் நீங்கி, ஆசார்யாளே ஸ்தோத்ரம் செய்து தன் லோகம் சென்ருன். பிறகுஆசார்யாள் நதியிலிருந்து கரையேறி வந்தார்கள். தாயார் வீட்டிற்கு வா என்று கூப்பிட்டாள். இனி நான் வீட்டிற்கு வரக்கூடாது. எனக்கு உலகெல்லாம் வீடுகள். எல்லோரும் என் தாய்கள் என்று தெரிவித்து நீ நிஜனக்கும் ஸமயம் வந்து உன்

கார்யங்களை ஸரியாக நடத்துகிறேன் என்று சொல்லி விட்டு ஆசார்யாள் தாயிடம் உத்திரவுபெற்று தனக்கு ஒரு ஸத்குருவைத்தேடி புறப்பட்டார்கள்.

4. குருபரம்பரை.

ஒரு ஸமயம் பாற்கடலில் ஸ்ரீ மஹாவிஷ்ணு ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருந்தார். பரமாத்மாவின் பாரம் தாங்கமாட்டாது சிரமபட்ட ஆதிசேஷன் திடீரென்று பாரம் அதிகமானதற்குக்காரணம் என்னவென்று பகவானிடத்தில் விஞ்ஞாபித்தார். ஸ்ரீ மஹாவிஷ்ணு, என் ஹிருதயத்தில் ஸ்ரீமன் நடராஜர் ஆனந்த தாண்டவம் செய்து கொண்டிருந்தார். அதை நான் தரிசித்து ஆனந்தமடைந்து கொண்டிருந்தபடியால் பாரம் அதிகமாயிற்று என்று சொன்னார். இதைக் கேட்ட ஆதிசேஷன் தானும் அந்த தாண்டவ தரிசனம் செய்ய விரும்பிகிறேன் என்று பகவானிடத்தில் விஞ்ஞாபித்துக்கொண்டார். பகவானும் உனக்கு சிதம்பர க்ஷேத்ரத்தில் ஸ்ரீ நடராஜர் ஆனந்த தாண்டவ தரிசனம் கொடுப்பார். அதைத் தரிசனம் செய்து, பாணிநீய, வ்யாகரண சூத்திரங்களுக்கு மஹா பாஷ்யம் பண்ணி பிரசாரம் செய்துவிட்டு, இங்கு வந்து சேர் என்று ஆக்ஞாபித்தார். ஆதிசேஷனும் சிதம்பர க்ஷேத்ரத்தில் பதஞ்சலி மஹர்ஷியாக அவதரித்து, பரமேச்வரனை பிரார்த்தித்து கடுமையான தபஸ் செய்தார். ஸ்ரீ நடராஜர் க்ருபையுடன் பதஞ்சலிக்கு ஆனந்த தாண்டவ தரிசனம் கொடுத்து, பாணிநியின் வியாகரண சூத்ரங்களுக்கு மஹா பாஷ்யம் பண்ணி பிரவசனம் செய்துவிட்டு உன் ஸ்வஸ்தானம் போய்ச் சேர் என்று அனுக்ரஹம் செய்து மறைந்தார். பதஞ்சலி மஹர்ஷியும் வ்யாகரண சூத்ரங்களுக்கு மஹாபாஷ்யம் செய்து முடித்தார். அதை தங்களுக்குப் பாடம் சொல்லும்படி 1000-பேர்கள் கேட்டுக்கொள்ள, அப்படியே சிஷ்யர்களுக்கும் தனக்கும் நடுவில் ஒரு திரைப்போட்டு யாராவது திரையை

விலக்கினுல் எனக்கு மிகவும் அப்ரியமுள்ளவனுக ஆவான் என்று சொல்லி 1000–முகங்களாலும் 1000-பேர்களுக்கும் பாடம்சொல்ல ஆரம்பித்தார். இப்படி பாடம்சொல்லி வரும் சமயத்தில் சிஷ்யர்கள் இவர் எப்படி 1000 பேர் களுக்கும் தனித் தனியாகப் பாடம் சொல்லுகிருர் என் பதை பார்க்க ஆவலுடன் திரையைவிலக்கிவிட ஆதிசேஷ னுடைய விஷாக்னியால் எல்லோரும் பஸ்மம் ஆகிவிட் டார்கள். இப்படி நேர்ந்ததற்காக பதஞ்சலி வருத்தப் பட்டுக்கொண்டிருந்தார். வெளியில் போயிருந்த ஒரு சிஷ்யன் வந்து தான் ஜலமோசனத்திற்குப் போயிருந்த தாயும், சொல்லாமல் போனதற்கு மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். கோபமடைந்த பதஞ்சலி யும் சிஷ்யனே பிரம்மராக்ஷஸ்ஸாகப் போ என்று சபித்தார். சிஷ்யரால் கேட்டுக்கொள்ளப்பட்டவராய் உனக்கெதிரில் வரும் பண்டிதர்களையெல்லாம் 'पच्' தாதுவுக்கு 'நிஷ் டா' ப்ரத்யயம் சேர்ந்தால் என்ன ரூபமென்று கேள் "पक्" என்று சொல்பவருக்கு இந்த மஹா பாஷ்யத் தை உபதேசம் செய்துவிட்டு சாபம் நீங்கப்பெறுவாய் என அனுக்ரஹித்தார். பதஞ்சலி சிஷ்யரும் ஒரு ஆலமரத் தில் ஏறி வருபவர்களையெல்லாம் இந்த கேள்வியைக் கேட்டு ஸரியாய் பதில் சொல்லாதவர்களை பிரம்மரக்ஷஸ் ஆனபடியால் சாப்பிட்டும் வந்தார். ஒரு சமயம் வடக்கே யிருந்து வந்த ஒரு பிராம்மணன்சரியாக "பக்வம்" என்று பதில் சொன்னுர். பதஞ்சலி சிஷ்யரும் அவரை நீ யார் என்று கேட்டு மகாபாஷ்யம் பாடம் கற்றுக் கொள் என்றும் சொன்னுர். அவனும், தன் பெயர் சந்திரகுப்தன் என்றும் வியாகரண பாஷ்ய பாடம் கேட்கவே வந்ததாயும் தெரிவித்தான். அவரும் அப்படியே பாஷ்ய பாடம் சொல்லிக்கொண்டு வந்தார். சந்திரகுப்தனும் அவர் பாடம் சொல்லியதை அந்த மரத்து ஆல இலையிலேயே துடையைக்கீறி ரத்தத்தினுல் ஆலிலைகளில் முழுவதையும்

எழுதி முடித்தான். பதஞ்சலி சிஷ்யரும் சாபம் நீங்கப் பெற்று சுகப்ரம்மத்தினிடம் ஸன்யாஸம் பெற்றுக்கௌட பாதர் என விளங்கினுர். சந்திரகுப்தனும் இப்படி 2 மாதம் ஆஹாரம் நித்ரை இல்லாமல் சிரமப்பட்டு ஆலி லேயில் எழுதிய மஹாபாஷ்ய மூட்டையை எடுத்துக் கொண்டு கிளம்பினுர். வழியில் களேப்பினுல் ஒரு வீட்டில் தீர்த்தபானம் செய்து அந்த மூட்டையை தலேயின் கீழ்வைத்துக்கொண்டு தூங்கிவிட்டார். அந்த இலேகளே ஆடுகள் பாதிக்குமேல் தின்றுவிட்டன. விழித்துக் கொண்டு பார்த்து பாக்கியிருந்த இலேகளே எடுத்துக் கொண்டு கிளம்பினுர். இதுவே " அஜபக்ஷிதபாஷ்யம் " என வழங்குகிறது. சந்திரகுப்தனும், வரும் மார்க்கத்தில் நான்கு ஸ்திரீகளே மணந்து வரருசி, விக்ரமார்க்கன், பட்டி, பர்த்ருஹரி, ஆகிய நான்கு பிள்ளேகளேயடைந்து அவர்களுக்குப் பாஷ்யத்தை சொல்லிவைத்து விட்டு, பிறகு கௌடபாதரிடம் ஸன்யாஸம் பெற்றுக் கோவிந்த யோகீந்த்ரர் என பதரிகாச்ரமத்தில் விளங்கி வந்தார்.

5. குருதர்சனம்.

தனக்குத் தகுந்த குருவைத் தேடிச் சென்ற நமது ஆசார்யாள், பல க்ஷேத்திரங்கள் சென்று கடைசியில் நர்மதா நதிக்கரையை அடைந்து அந்த ஸமயம் அங்கு வஸித்த கோவிந்த பகவத்பாதரை தரிசனம் செய்து நமஸ்கரித்தார். அப்பொழுது நர்மதா நதி பெருக்கெடுத்தோட அதனுல் ஜனங்கள் சிரமத்தை அடைவதைக்கண்ட சங்கரர் அந்த ப்ரவாஹத்தைத் தன் கமண்டலுவில் அடக்கிவிட்டார். இவ்வளவு பெருமை வாய்ந்தவரைக் கண்ட ஜனங்களுடைய சப்தத்தினுல் ஸமாதிகலேந்த ஸ்ரீகோவிந்த பகவத்பாதர், ஸ்ரீ சங்கரரை நீ யார் என்று கேட்டார். ஆசார்யாள் அதற்கு பதில் சொல்லும் வாயிலாக ஸகல வேதாந்தங்களேயும் உள்ளடக்கிய,

" न भूमिर्नतोयं न तेतो न वायुः
न खं नेन्द्रियंवा न तेषां समूहः ।
अनेकान्तिकत्वात् सुषुप्त्येक सिद्धः
तदेको विशिष्टः शिवः केवलोहम् " ॥

" பூமி, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம், இந்திரியங்கள் இவைகளின் கூட்டம் முதலிய ஒன்றும் நானல்ல. முடிவற்றதாயும், ஸுஷுப்தியினுல் அறியக்கூடியதும் எங்கும் நிறைந்ததான இரண்டற்ற பிரம்மமே நான்" என்று ஆரம்பித்து 10 சுலோகங்களால் பதில்சொன்னுர். "தசச்லோகி" என்னும் இந்த கிரந்தத்திற்கு ஶ்ரீ மதுசூதன ஸரஸ்வதி முதலிய பெரியோர்கள் வ்யாக்யானம் செய்து இருக்கிருர்கள். இவ்வாறு தசச்லோகியைக் கேட்ட கோவிந்த பகவத்பாதர் ஆசார்யாளைப் போன்ற உத்தம சிஷ்யனை அடையும்படியான பாக்யம் கிடைத்ததே என ஸந்தோஷமடைந்து ஆசார்யாளுக்கு உபதேசம் செய்து, காசிக்குச் சென்று, வ்யாஸருடைய ப்ரம்ம சூத்திரங்களுக்கு பாஷ்யம்பண்ணி பிரசாரம் செய் என ஆக்ஞாபித்தார். குருவினுக்ஞையைப் பெற்றுக்கொண்டு கிளம்பிய ஆசார்யாள் காசி க்ஷேத்திரத்தை அடைந்து ப்ரம்ம ஸூத்திரங்களுக்கு பாஷ்யம் செய்து சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்துகொண்டிருந்தார்.

6. பத்மபாதர் வரலாறு :

தென்னுட்டில் சோழ தேசத்தைச் சேர்ந்த காவிரிக்கரை வாஸியான ஸனந்தனர் என்னும் ப்ராம்மணச்ரேஷ்டர், ஸம்ஸாரத்தில் வெறுப்புற்று, ஞானுேபதேசத்திற்குத்தகுந்த ஸத்குருவைத் தேடியலைந்து, கடைசியாக காசி க்ஷேத்திரத்தை அடைந்து, ஆசார்யாள் அநேகம் சிஷ்யர்களுக்கு அத்வைத தத்துவத்தை உபதேசித்துக்கொண்டு

இருப்பதைக் கண்டு அவர் பாதாரவிந்தங்களில் விழுந்து வணங்கி தனக்கு உபதேசம் செய்யவேண்டுமென ப்ரார்த்தித்தார். ஆசார்யாளும் அவருக்கு ஸன்யாஸம் கொடுத்து ஆத்ம வித்யையை உபதேசம்பண்ணி, முக்ய சிஷ்யராகக் கொண்டார்கள். ஆசார்யாள் இவரிடம் அதிக பிரியத்தோடிருப்பதைக் கண்ட மற்ற சிஷ்யர்களுக்குப் பொருமை உண்டாயிற்று. அதைப் போக்குவதற்காக ஒரு ஸமயம் ஆசார்யாள் கங்கை நதியின் ஒரு கரையிலிருந்துகொண்டு மற்ெருரு கரையிலிருந்த ஸனந்தனரை வஸ்த்ரம் கொண்டு வா என ஆஞ்ஞாபித்தார். ஸனந்தனர் வெள்ளத்தையும் யோசிக்காதவராய் குரு பக்தியை முன்னிட்டு வஸ்திரத்துடன் கங்கையில் இறங்கிவிட்டார். அவருடைய குருபக்தியைக் கண்ட கங்காதேவியும் அவருடைய ஒவ்வொரு அடியிலும் தாமரைப் புஷ்பத்தை வைத்து ஸௌக்யமாய்க் கரைசேர்த்தாள். இவருடைய குருபக்தியின் பெருமையைக் கண்ட மற்ற சிஷ்யர்களும் பொருமை நீங்கப்பெற்ருர்கள். அது முதல் ஸனந்தனர் பத்மபாதர் என்னும் பெயருடன் ஆசார்யாளால் அழைக்கப்பட்டு எல்லோராலும் கொண்டாடப்பட்டார்.

7. மனீஷா பஞ்சகம், வியாஸ தர்சனம்:

ஆசார்யாள் மணிகர்ணிகா ஸ்னைத்திற்குப் போகும் பொழுது எதிரில் விச்வேச்வரர் 4 நாய்களுடன் சண்டாள ரூபியாய் வந்தார். அவனே தூர விலகிப்போ என்று சொன்னர். அதற்குச் சண்டாளரூபியான விச்வேச்வரன் "அன்னமயமான இந்த சரீரத்தையா? அல்லது உள்ளே விளங்கும் சைதன்யத்தையா? எதைப் போகச் சொல்லுகிருய்"? என்றும் "கங்கா ஜலத்தில் தோன்றும் சூர்யனுக்கும், குடத்தில் தோன்றும் சூர்யனுக்கும் பேதம் உண்டா? மண் பாத்ரத்தில் தோன்றும் ஆகாசத்திற்கும், தங்கப்பாத்திரத்தில் தோன்றும் ஆகாசத்திற்கும் பேதம்

உண்டா? இம்மாதிரி பேதம் எப்படி வந்தது''? என்றும் கேட்டார். இதைக் கேட்ட ஆசார்யாள்:

"जाग्रत्स्वप्न सुषुप्तिषु स्फुटतरा या संविदुज्जृम्भते
यात्रह्मादि पिपीलिकान्त तनुषु प्रोता जगत्साक्षिणी ।
सैवाहं नच दृश्य वस्त्विति दृढ प्रज्ञापि यस्यास्तिचेत्
चण्डालोस्तु सतु द्विजोस्तु गुरुरित्येषा मनीषा मय" ॥

"ஜாக்ரம், ஸ்வப்னம், தூக்கம் இவைகளில் விளங்கும் சக்தியும், பிரும்மா முதல் புழு வரையில உள்ள சரீரங்களில் வ்யாபித்திருப்பதும் இந்த உலகத்திற்கு ஸாக்ஷியாகவுமுள்ள பிரம்மத்தை நானே அது, காணப்படும் வஸ்துக்கள் நானல்ல என்னும் நிச்சயமான ஞானம் எவனுக்கு இருக்கிறதோ அவன் சண்டாளனுக இருந்தாலும் பிராம்மணனுக இருந்தாலும் எனக்கு குரு" என்று ஆரம்பிக்கும் "மனீஷா பஞ்சகம்" என்னும் 5 சுலோகங்களைச் சொல்லி நமஸ்கரித்தார்கள். உடனே விச்வேச்வரன் ஸ்வஸ்வரூபத்துடன் காக்ஷியளித்து, லோகத்தில் அத்வைத வித்யையைப் பிரசாரம் செய்து பிறகு என்னிடம் வந்துசேர் என்று அனுக்ரஹித்து மறைந்தார். பிறகு ஒரு ஸமயம் பாஷ்ய பாடம் சொல்லிக்கொண்டிருக்கும்போது வியாஸர் கிழப்ராம்மண வேடம் பூண்டு ஆசார்யாளிடத்தில் வந்து கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். அநேக நாட்கள் வாதம் செய்தும், வாதம் முடிவடையாததைக் கண்ட பத்மபாதர், வியாஸரின் உண்மை ஸ்வரூபத்தைத் தெரிந்து மஹா விஷ்ணுவான வியாஸரும், ஈச்வரரான சங்கரரும் விவாதம் செய்யும்போது நான் என்ன செய்யமுடியும் என்று சொன்னர். உடனே வியாஸர் தன் நிஜ ஸ்வரூப தரிசனம் கொடுத்து என்னுடைய ஸூத்திரங்களுக்கு நீ செய்திருக்கும் பாஷ்யம்தான் ஸரியான பாஷ்யம், இதை உலகத்தில் பிரசாரம் செய்து நாஸ்திக

மதங்களைக் கண்டித்து, அத்வைதத்தை ஸ்தாபித்து பிறகு ஸ்வஸ்தானம் போகலாமென்று சொல்லி 16 வயதை அடைந்திருந்த ஆசார்யாளுக்கு மேலும் 16 வயது அனுக்ரஹம் செய்து மறைந்தார்.

8. குமரிலபட்டர், மண்டனமிச்ரர் வரலாறு:

வியாஸருடைய ஆக்ஞையை முன்னிட்டு ஆசார்யாள் காசியை விட்டுக் கிளம்பி ப்ரயாகை க்ஷேத்திரத்தை அடைந்து உத்தமமான கங்கை, யமுனை, ஸரஸ்வதி மூன்றும் சேருமிடமான திரிவேணியில் விதிப்படி ஸ்னானம் செய்தார்கள். அந்த ஸமயம் பௌத்த மதத்தை நாசம் செய்து கர்ம மார்க்கத்தை ஸ்தாபித்த ஸுப்ரமண்ய அவதாரமான குமரிலபட்டர் துஷாக்னியில் பிரவேசிப்பதைக் கேட்டு தன் பாஷ்யத்தைச் சொல்ல அவரிடம் சென்றார். குமரிலபட்டர், பௌத்த குருவிடமிருந்து கற்ற பௌத்த மதத்தையே நாசம் செய்து குருத்ரோஹம் பண்ணிய பாபத்திற்காகவும், மீமாம்ஸ மதத்தை ஸ்தாபிக்கவேண்டி ஈச்வரன் இல்லை என்று சொன்ன பாபத்திற்காகவும் உமிக்காந்தல் அக்னியில் பிரவேசம் செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய சிஷ்யனும், சிறந்த மீமாம்ஸகனும் மாஹிஷ்மதீ நகரத்தில் வஸிப்பவனுமான, மண்டனமிச்ரனிடம் சென்று அவனைத் திருப்புங்களென்று சொல்லி ஆசார்யாளுக்கு விடைகொடுத்தார். பிறகு, ஆசார்யாள் மாஹிஷ்மதி நகரம் அடைந்து, பெண்கிளிகள் முதல் வேதவிசாரம் செய்யும் மண்டனமிச்சர் வீட்டை அடைந்தார். அந்த ஸமயம் மண்டனமிச்ரர், ஜைமினி மஹர்ஷியையும், வ்யாஸ மஹர்ஷியையும் நிமந்தரணம் வைத்து பித்ரு சிராத்தம் பண்ணிக்கொண்டு இருந்தார். வாசற் கதவு மூடப்பட்டிருந்தபடியால் ஸ்ரீ சங்கரர் யோக சக்தியினால் உள்ளே குதித்து எதிரில் நின்றார். இவரைக் கண்ட மண்டனமிச்ரர் தூஷிக்க ஆரம்பித்தார். வ்யாஸ

வாக்யத்தினல் ஆசார்யாளைத் தெரிந்துகொண்ட மண்டன மிச்ரர் ஆசார்யாளை விஷ்ணு ஸ்தானத்தில் நிமந்த்ரணம் இருக்கப்ரார்த்தித்தார். ஆசார்யாள் வாதபிக்ஷை வேண்டு மெனத் தெரிவித்தார்கள். சிராத்தம் முடிந்து ஜைமினியும் வியாஸரும் மறைந்தார்கள். மறுநாள் அனுஷ்டானத்தை முடித்துக்கொண்டு மண்டனமிச்ரருடைய பத்னியும் ஸரஸ் வதியின் அவதாரமுமான ஸரஸவாணியை மத்யஸ்தமாக வைத்து, தோற்றவர் ஜயித்தவருடைய ஆச்ரமத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்னும் நிபந்தனையுடன் வாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஸரஸவாணியும் இரண்டு மாலைகளை இரண்டு பேருக்கும் கொடுத்து யார் மாலை வாடுகிறதோ அவரே தோற்றவர் என்று சொல்லி, வீட்டுக் கார்யத்தை கவனித்தாள். இரண்டுபேருக்கும் அநேக நாட்கள் வாதம் நடந்தது. ஒருநாள் மண்டன மிச்ரர் கழுத்துமாலை வாடிவிட் டது. ஸ்ரீ ஆசார்யாள் ஜயத்தைக் கண்ட தேவர்கள் புஷ்ப வர்ஷம் வர்ஷித்தார்கள். ஸரஸவாணியும், தன் பதியான மண்டனர் தோற்று விட்டதால் ஆச்சார்யாளுடைய ஆச்ரம மாகிய ஸன்யாஸம் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நிச்சயித்து, இரண்டு பேர்களையும் பிக்ஷைக்கு அழைத் தாள். பிறகு மண்டநமிச்ரரும் ஆசார்யாளை ப்ரார்த்தித்து ஸன்யாஸம் வாங்கிக்கொண்டு, ஸுரேச்வராசார்யாள் என்னும் பெயருடன் வார்த்திகம், நைஷ்கர்ம்ய ஸித்தி முதலிய க்ரந்தங்களைச் செய்து பிரஸித்தியாய் விளங்கி னர். ஸரஸ்வதி ரூபத்தை யடைந்த ஸரஸவாணியை தன்னுடன் வரும்படி ஆசார்யாள்கேட்டுக்கொள்ள, திரும் பிப்பார்க்குமிடத்தில் நின்று விடுவேன் என்னும் நிபந்த னையுடன் பின் தொடர்ந்தாள்.

9. பத்ரீ, கேதாரம், கைலாஸம் செல்லுதல்:

ஆசார்யாள் மாஹிஷ்மதீ நகரத்தை விட்டு புறப்பட்டு ஹிமாலயத்தில் பத்ரீ, கேதார், யாத்ரையாய் வரும்

ஸமயம் அங்குள்ள ஒரு குகையில் நிஷ்டையிலிருந்த கௌட பாதரையும் கோவிந்தபகவத்பாதரையும் கண்டு தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம் இயற்றி நமஸ்கரித்தார்.

" विश्वं दर्पणदृश्यमाननगरी तुल्यं निजान्तर्गतं
पश्यन्नात्मनिमायया बहिरिवोद्भूतं यथा निद्रया ।
यस्साक्षात्कुरुते प्रबोधसमये स्वात्मानमेवाद्वयं
तस्मै श्री गुरु मूर्तये नम इदं श्री दक्षिणामूर्तये ॥

இம்மாதிரி 8-சுலோகங்களைக் கேட்டு நிஷ்டை கலைந்து கௌட பாதரும் கோவிந்த பகவத் பாதரும் அனுக்ரஹம் செய்தார்கள். ஆசார்யாளும் தான் செய்த பாஷ்யத்தை அவர்களுக்குக் காட்டி பிரார்திக்க, அவர்களும் ஆனந்தம் அடைந்தார்கள். பிறகு ஆசார்யாள் கங்கோத்ரி சென்று அங்கு தபஸ்பண்ணி ஸப்தகோடி மஹா மந்திரங்களும் ஸித்தியடையப்பெற்று, பரமேச்வரன் தரிசனத்திற்காக கைலாஸம் சென்று ஈச்வரனை ஸ்தோத்ரம் செய்து பிரார்தித்தார். பரமேச்வரன் 5-ஸ்படிக லிங்கங்களை அனுக்ரஹம் செய்து கொடுத்தார். மந்த்ர சாஸ்த்ரங்களை உள்ளடக்கியதாயும் பிரம்ம வித்யா ஸ்வரூபிணியான அம்பாளின் ஸ்வரூபாநந்தத்தை அள்ளி வீசுவதுமான "ஸௌந்தர்ய லஹரீ" என்னும் ஸ்தோத்ரத்தையும் செய்தார்கள்.

शिवश्शक्तया युक्तो यदि भवति शक्तः प्रभवितुम्
नचेदेवं देवो नखलुकुशलस्पन्दितुमपि ।
अतस्त्वामाराध्यां हरि हर विरिञ्चादिभिरपि
प्रणन्तुं स्तोतुं वा कथमकृत पुण्यः प्रभवति ॥

"அம்பிகையோடு கூடிய பரமேச்வரன் கார்யங்களைச் செய்வதில் ஸமர்த்தராகிறார். அப்படி இல்லாவிடில் அவரால் நகரவும் முடியாது. பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் இவர்களால் பூஜிக்கத் தகுந்த அம்பிகையை ஸ்தோத்ரம் செய்யவோ நமஸ்கரிக்கவோ புண்யம் செய்யாதவர்கள் எப்படி சுத்தர்கள் ஆவார்கள்" முதலான 100-சுலோகங்களால் ஸௌந்தர்ய லஹரியைச் செய்தார்கள். பிறகு அங்கிருந்து பதரிகாசிரமம்வந்து கைலாஸத்திலிருந்து கொண்டுவந்த 5-ஸ்படிக லிங்கங்களில் ஒன்றான முக்தி லிங்கத்தை ஸ்தாபித்து, ஜோதிர் பீடத்தை ஸ்தாபித்து, மட நிர்மாணமும் செய்தார்கள். அங்கு குளிரால் சிரமப்பட்ட ஜனங்களுக்காக பத்ரீநாதனைப் பார்த்து உஷ்ணோதகம் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டார். நாராயணரும் தன் பாதத்தின் அடியிலிருந்து உஷ்ணோதகத்தைவிட, அது ஒரு குண்டமாகி ஜனங்களின் குளிரை நீக்கியது. விறைத்துப்போகும் பனிக்கட்டி உறையும் அந்த இடத்தில், ஸ்னானத்திற்கு கொதிக்கும் வெந்நீர் கிடைப்பது பகவத்பாதாளின் மஹிமாதிசயத்தைத் தெரிவிக்கிறது. கேதாரத்தில் ஜ்யோதிர் லிங்கமான கேதார நாதனையும், பத்ரியில் பத்ரீநாதனையும் ப்ரதிஷ்டை செய்து பூஜித்தார்கள். பிறகு அங்கிருந்து புறப்பட்ட ஆசார்யாள் நேபாள க்ஷேத்ரத்தை அடைந்து பசுபதிநாதனை தரிசனம் செய்து புத்தமதஸ்தர்களையெல்லாம் வாதத்தில் வென்று, நீலகண்ட க்ஷேத்ரம் அடைந்து 5-லிங்கங்களில் ஒன்றான "வர" லிங்கத்தை அங்கு ஸ்தாபித்து அங்கிருந்து புறப்பட்டு வந்துகொண்டிருக்கும் வழியில் பல துர்மதங்களைக் கண்டித்தார்கள்.

10. காளிகாபீட, விமலாபீட ஸ்தாபனம்:

இவ்விதம் ஆசார்யாள் அநேக க்ஷேத்ர தரிசனம், தீர்த்தாடனம் முதலியன செய்து மேற்கு ஸமுத்ரக் கரை அடைந்து, துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ணனை தரிசனம்

செய்து "காளிகாபீடம்" ஸ்தாபித்து மட ப்ரதிஷ்டையும் செய்து ஸந்தோஷித்தார்கள். அங்கிருந்து புறப்பட்டு பல க்ஷேத்ர தரிசனம் செய்துகொண்டு கிழக்கு ஸமுத்ரக் கரை வந்து ஜகன்னுதம் என்னும் பூரிக்ஷேத்ரத்தில் விமலாபீடம் ஸ்தாபித்து கோவர்த்தன மடம் நிர்மாணம் செய்துவிட்டு புறப்பட்டார்கள்.

11. காபாலிகன் வரலாறு:

ஆசார்யாள் துர்மதங்களைக் கண்டனம் செய்து கொண்டு வரும் ஸமயம், பைரவ ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த காபாலிகன் ஒருவன் ஆசார்யாளை வாதத்தில் ஜயிக்க முடியாதெனத் தெரிந்து தந்திரத்தால் கொன்றுவிட நினைத்து தனியாய் இருக்கும் ஸமயம் ஆசார்யாளிடம் வந்து தெரிவித்தான். நான் ஒரு யாகம் செய்ய நிச்சயித்திருக்கிறேன். அதற்கு ஒரு சக்ரவர்த்தியினுடைய சிரஸ்ஸையாவது ஒரு க்ஞானியினுடைய சிரஸ்ஸையாவது அக்னியில் ஹோமம் செய்தால் பரமேச்வரன் ப்ரீதியடைவார். சக்ரவர்த்தியின் சிரஸ் எனக்குக் கிடைக்காது. உலகத்தைத் துறந்த தாங்கள் சிரஸ்ஸைக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். ஆசார்யாளும் அவன் வேண்டுகோளுக்கிணங்கி நான் தனியாய் இருக்கும் ஸமயம் வந்து தலையைக் கொண்டு போய்விடு, சிஷ்யர்கள் பார்த்தால் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று சொன்னுர். ஒருஸமயம் ஆசார்யாள் தனியாக ஸமாதி நிலையில் உலகத்தை மறந்து நிற்கும் போது காபாலிகன் வந்து கத்தியை ஓங்கி தலையை வெட்டயத்தனித்தான். அந்த ஸமயம் பத்மபாதர் நதியில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தவருக்கு நரஸிம்ம ஆவேசம் வந்து ஆசார்யாளிடத்தை அடைந்து காபாலிகனுடைய உடலைக் கிழித்துப் போட்டார். ஆசார்யாள் நிஷ்டை கலைந்து பார்த்து நரஸிம்ம மூர்த்தியை ஸ்தோத்ரம்

செய்து உக்ரத்தைத் தணித்தார். பத்மபாதரைப் பார்த்து இந்த நரஸிம்மோபாஸனம் எப்பொழுது உனக்குண்டாயிற்று என்று கேட்டார். பத்மபாதர் ஒரு ஸமயம் நான் நரஸிம்ம மூர்த்தியைப் பிரார்த்தித்து தவஸ் பண்ணிக்கொண்டிருந்தேன். பகவான் பிரத்யக்ஷமாகாமல் நான் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும் போது ஒரு வேடன் வந்து நீர் என்ன செய்கிறீர் என்று கேட்டான். நான் நரஸிம்ம மூர்த்தியின் தரிசனத்திற்காக தபஸ் செய்வதாகச் சொன்னேன். அவனும் அவர் எப்படி இருப்பாரென்று சொன்னால் நான் கொண்டு வருகிறேன். ஸாயங்காலம் வரையில் தேடி அதே தியானமாய் சிரமப்பட்டு கடைசியில் பகவான் அவனுக்கிறங்கி மனிதனும் சிங்கமும் கலந்த உருவாய் தென்பட்டார். நரஸிம்மத்தை கட்டிக்கொண்டு வந்து இதோ பார் என்று சொன்னான். கண்ணுக்குத் தெரியாமல் நான் வருத்தப்பட்டு இந்த வேடனுக்கு கிடைத்த பாக்யம் எனக்குக் கிடைக்கவில்லையே என்று நினைத்து ஸ்தோத்ரம் செய்தேன். உடனே நரஸிம்ம மூர்த்தி தோன்றி, வேடன் அதே தியானமாய் தேடியபடியால் அவனுக்கு தரிசனம் கொடுத்தேன். உனக்கு எப்பொழுது வேண்டுமானாலும் வருகிறேன் என்று அனுக்ரஹம் செய்து மறைந்தார். வேடனும் மறைந்து விட்டான். இப்பொழுது நதியில் ஸ்நானம் செய்துக்கொண்டிருந்தேன். நரஸிம்மம் வந்ததும் இவனைக் கொன்றதும் எனக்குத் தெரியாது என்று பத்மபாதர் ஆசார்யாளிடம் விக்ஞாபித்து அனுக்ரஹம் பெற்றார்.

12. ஹஸ்தாமலகர்–தோடகாசார்யர்:

ஆசார்யாள் யாத்ரா மார்க்கமாய் கோகர்ணம்சேர்ந்து அங்கு ஈச்வரதர்சனம் செய்து இறந்த குழந்தையை உயிர்ப்பித்து பெற்றோர்களை ஸந்தோஷிக்கச் செய்தார் மூகாம்பிகாக்ஷேத்ரம் சென்று அம்பிகையைத் தர்சனம்

செய்து ஸ்தோத்ரம் செய்தார். பிறகு ஸ்ரீபலி என்னும் கிராமம் சேர்ந்து அங்கு பிரபாகரர் என்னும் பிராம்மண ருடைய குழந்தை ஊமையாயிருப்பதைக் கண்டு தகப்ப ஞர் தன்னிடம் கொண்டுவிட்ட குழந்தையைப் பற்றி விசாரித்தார். ஊரில் எல்லோரும் ஜடன் என்றே அழைப் பதால் நானும் ஜடா என்றே கூப்பிடுகிறேன் என்று தகப்பஞர் தெரிவித்தார். ஆசார்யாள் அந்தக்குழந்தையை ஜடா என்று கூப்பிட்டார். ஊமையாயிருந்த குழந்தை பேச ஆரம்பித்து, " नाहं जडः किन्तु जडः प्रवर्तते " என்பது முதலான 12- சுலோகங்களால் பரமாத்மாவே நான் என்று சொல்லிற்று. குழந்தை பேசிவிட்டானென நினைத்த தகப்பஞர் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனர். அங்கு மறுபடி ஊமையாயிருப்பதையும், ஆசார்யாளிடத்தில் கொண்டுவிட்டால் பேசுவதையும் கண்ட அந்த பிராம்மணர் அவனை ஆசார்யாளிடத்திலே யேவிட்டுவிட்டார். ஆசார்யாளும் அவருக்கு ஸன்யாஸம் கொடுத்து ஹஸ்தாமலகர் என்னும் பெயரையும் அனுக் ரஹம் செய்து முக்ய சிஷ்யர்களில் ஒருவராகக் கொண் டார். ஆசார்யாளுடைய சிஷ்யர்களில் ஒருவரான கிரி என்பவர் சற்று புத்தி குறைவாயிருந்தார். ஒருநாள் பாஷ்யபாடம் சொல்லும்போது கிரி வர தாமதமாயிற்று. ஆசார்யாள் அவருக்காக காத்திருக்க, மற்ற சிஷ்யர்கள் அவரை குறைவாகப் பேசவே, ஆசார்யாள் அங்கிருந்த படியே கிரி என்பவர்க்கு ஸகல சாஸ்த்ரங்களையும் தெரி யும்படி அனுக்ரஹம் செய்தார்கள். கிரியும் வரும்போதே विदिताखिल शास्त्र सुधाजलधे महितोपनिषत् कथितार्थ निधे हृदये कलये विमलं चरणं भवशङ्कर देशिक मे शरणम् ॥ "எல்லா சாஸ்திரங்களையும் தெரிந்தவரும் உபநிஷத் அர்த்தங்களை பிரவசனம் செய்யும் தங்கள் சரணத்தை தியானம் செய் கிறேன். ஹே சங்கர குருவே சரணம்'' என்பது முதல்

8-சுலோகங்கள் சொல்லிக்கொண்டே வந்தார். ஆசார்யாள் ஸந்தோஷமடைந்து தோடக விருத்தத்தில் சுலோகங்கள் சொல்லிக்கொண்டே வந்தமையால் தோடகாசார்யர் எனப் பெயரிட்டு அழைத்தார்கள்.

13. சிருங்கேரி மடம்-சாரதா பீட ஸ்தாபனம்:

ஆசார்யாள் வந்துகொண்டே இருக்கும்போது கர்நாடக தேசத்தில் துங்கபத்ரா நதிதீரத்தில் 'ரிச்யசிருங்கர்' முதலிய மஹர்ஷிகளாலும் தேவதைகளாலும் ஆச்ரயிக்கப்பட்டதும், ஜீவராசிகள் வைரபுத்தியை விட்டு ஒன்று கூடி வஸிக்கும் உத்தம க்ஷேத்ரமான ச்ருங்கேரி வந்தார். பின்னுலேயே வந்துகொண்டிருந்த ஸரஸ்வதியின் பாத சிலம்புகள் அங்கு ஆற்று மணலில் புதைந்து சப்தம் இல்லாமற் போகவே, சப்தம் கேட்கவில்லை யென்று ஆசார்யாள் திரும்பிப்பார்த்தார்கள். ஸரஸ்வதி அங்கேயே கோயில் கொண்டு விட்டாள். ஆசார்யாள் அந்த உத்தம க்ஷேத்ரத்திலேயே ஸாரதா பீடம் ஸ்தாபித்து, மடம் ஏற்படுத்தி, போகலிங்க சந்த்ரமௌளீச்வரரையும் ஸ்தாபித்து பாரதி ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த சிஷ்யர்களை அங்கு தத்துவோபதேசத்திற்கும் மடபரிபாலனத்திற்கும் நியமித்தார்கள். இந்த சாரதா பீடத்திற்கு ஸ்ரீ ஸுரேச்வராசார்யாளை தலைவராக நியமித்ததாக ஸ்ரீ மாதவீய சங்கர விஜயம், ஸ்ரீ சித்விலாஸீய சங்கர விஜயமும் சொல்லுகிறது. ஆனந்தகிரீய சங்கர திக்விஜயம் பத்மபாதர் தலைவர் எனச் சொல்லுகிறது.

எப்படியாயிருந்தாலும் ஸ்ரீசாரதாம்பாளின் அனுக்ரஹத்தினுல் இப்பொழுதும் இந்தபீடத்தில் உள்ளவர்கள் வித்வான்களாயும், யோகிகளாயும் விளங்குகிருர்கள்.

14. மாத்ரு கிருத்யம்.

இந்த ஸமயம் தாயார் அந்த்ய காலம் வந்து தன்னை நினைத்ததைத் தெரிந்த ஆசார்யாள் யோக சக்தியினுல்

மாதாவின் ஸமீபம் சேர்ந்து சிவபுஜங்கம், விஷ்ணு புஜங்கம் இவைகளால் ஸ்தோத்ரம் செய்ய, விஷ்ணுபார்ஷதாள் வந்து விமானத்தில் வைகுண்டம் அழைத்துச் சென்றனர். மாத்ரு சரீர ஸம்ஸ்காரத்திற்கு, ஸன்யாஸி கர்மா செய்வதற்கு அர்ஹமில்லே என்று சொல்லி ஸஹாயத்திற்கு வரமறுத்தார்கள். ஆசார்யாள் மாத்ருசரீரத்தை வீட்டுக் கொல்லேயிலேயே வைத்து யோகாக்னியால் தஹனம் செய்து மாத்ரு கர்மாவை முடித்தார்கள். காலடி அக்ரஹாரத்திற்கு சாபமும் கொடுத்தார்கள். இப்பொழுதும் அங்கு கொல்லேப்புறத்தையே ஸ்மசானமாக்கி தஹனம் செய்கிருர்கள் என்று தெரிகிறது. இப்பொழுது அங்கு சிருங்கேரி ஆசார்யாள், சாரதாம்பாள் ஆலயமும், ஸ்ரீ ஆசார்யாள் ஆலயமும் கட்டி பிரதிஷ்டை செய்து இருக்கிருர்கள்.

15. திக்விஜயம்:

ஆசார்யாள் ராமேச்வரம் முதலிய க்ஷேத்ரங்கள் தரிசனம் செய்யப் புறப்பட்டு ஆங்காங்கு அத்வைதமதத்தை ஸ்தாபித்து துர்மதங்களேயெல்லாம் கண்டித்து யதி ஸார்வ பௌமராய் பிரகாசித்தார்கள். ஜம்புகேச்வரத்தில் அகிலாண்டேச்வரியின் உக்ரகலேயைத் தணித்து எதிரில் மஹாகணபதியை ஸ்தாபித்து அம்பாளுக்கு தாடங்க பிரதிஷ்டையும் செய்தார்கள். திருப்பதியில் ஸ்ரீ வெங்கடேசன் ஸன்னிதியில் தனுகர்ஷண யந்திரம் ஸ்தாபித்தார்கள். சென்னே ஸமீபமுள்ள திருவொற்றியூரில் திரிபுரஸுந்தரியின் உக்ரகலேயைத் தணித்து மற்ருெரு வன துர்க்கையின் உக்ரகத்தையும் சாந்தமாகச் செய்து ஸௌம்யப் படுத்திஞர்கள். மத்யார்ஜுன க்ஷேத்ர தரிசனம் செய்து அத்வைத தத்வம் புரியாமல் ஜனங்கள் சிரமப்படும் பொழுது ஆச்சார்யாள் மத்யார்ஜுன க்ஷேத்ரத்தில் ஈச்வரனேப் பிரார்த்திக்க, மஹாலிங்க மூர்த்தி நேரில் தோன்றி அத்வைதமே ஸத்யம் என

மும்முறை சொன்னார். அதன் பிறகு ஆசார்யாள் தென்னாட்டில் பரம கௌரவமடைந்தார்கள். பிறகு சிதம்பரத்தில் ஸ்படிகலிங்கமான சந்த்ரமௌளீஶ்வர மோக்ஷலிங்கத்தை ஸ்தாபித்தார்கள். ஆங்காங்கு எதிர்ப்பட்ட மதவாதிகளைக் கண்டித்த ஆசார்யாளின் பெருமை என்னைப் போன்ற மந்தமதிகளால் சொல்லத்தக்கதன்று. வித்யாரண்யஸ்வாமிகள்:

बुद्धो युद्ध समुद्यतः किलपुनः स्थित्वाक्षजद्विद्तः
कोणेद्राक्कणभुग्व्यलीयत तमस्तोमावृतोगौतमः ।
भग्नोसौकपिलः पलायतपातञ्जलश्चाञ्जलिं
चक्रुस्तस्ययतीभितुश्चतुरता केनोपमोभेतसा ॥

“ புத்தர், தார்க்கிகன், கௌதமர், கபிலர், பதஞ்சலி முதலிய எல்லா மதஸ்தர்களும் ஆசார்யாளின் எதிரில் நிற்க முடியாமல் மறைந்தார்கள் ” என்று ஆசார்யாள் கண்டித்த மதங்களையும் அவாளுடைய பெருமையையும் விளக்குகிறார்கள்.

16. காஞ்சீபுரம் காமகோடி பீடஸ்தாபனம்:

உலகத்திற்கு மத்ய ஸ்தானமாயும், மோக்ஷபுரிகளில் ஒன்று என்ப் பிரஸித்திப்பெற்றதாயும், முப்பத்து முக்கோடி தேவதைகளால் ஸேவிக்கப்பட்டதாயும் தொண்டை மண்டலம் காஞ்சிமண்டலம் சான்றோர்கள் நிறைந்தது எனக் கொண்டாடப் படுவதாயும், 3 தினங்கள் தான் ஒரிடத்தில் வஸிக்கலாமென நிபந்தனையுள்ள ஸன்யாஸிகள் கூட நிபந்தனையில்லாமல் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் வஸிக்கலாமென சாஸ்த்ரம் கூறுவதாயும், கிழக்கே மஹாபலிபுரம், தெற்கே திருபுலிவனம், மேற்கே விரிஞ்சிபுரம், வடக்கே நாராயாணவனம் இவைகளை எல்லையாயும் கொண்ட காஞ்சி மண்டலத்திற்கு

தலைநகராய் விளங்குவது காஞ்சிபுரம் என்னும் நகரம். இதில் ஏகாம்பரநாதர் என்னும் பெயருடன்பரமேச்வரன் மாமரத்தடியில் தோன்றியனுக்ரஹம் செய்ததும், ஹஸ்திகிரிநாதன் என்னும், வரதராஜப்பெருமாள் மலையில் கோயில் கொண்டதும், ஸர்வமங்களையான காமாக்ஷி அம்பிகையை பிரதானமாகவும் கொண்டுள்ளது. இந்த அம்பிகை பிலாகாசரூபிணியாயும், ஸர்வ ஜகத்துக்கும் அனுக்ரஹம் செய்யும் ஸௌந்தர்யமூர்த்தியாகவும் விளங்குகிருள். இப்படி உலகிலேயே உயர்ந்த காஞ்சி க்ஷேத்ரத்தை ஆசார்யாள் அடைந்தார்கள்.

1. " காவிரி யாற்றிடையார் திருவானைக்
காவின் புடடைபுக்குத்
தேவியை யேத்துபு முன்னமையூர்
பலதீயுந்தகை தேர்ந்து
நீவிட யானை முகத்தனையம்
பிகை நேரிற்ருபித்தே
காவி மதுர்ப்பணை மேயவளம்பொலி
காஞ்சிப்பதி சேர்ந்தார் "

2. " திருவருண்மிக்க வேகாம்பர நாதரை
தெரிசித் தருச்சித்துப்
பொருவில் காமாட்சிதன் சன்னிதி
மேவுபுபோற்றிக் கனிவோடுந்
தருமமெய்க் காமகோடி யந்திரத்தினைத்
தாபித்தன் மேய
சருவதே வாலய சீரணேத்
தகவாற் றினராகி "

3. " கோலமிகப் பொலியம்பிகை கோயில்
கொள்குகையுட் புகுந்தங்கட்
டாலமதித்திடு கோவிந்த பாதருந்
தமிழ்மாமுனி வோனுஞ்

சாலவுரைத் துள வித்தைகள்
யாவையுந்தா முன்னுபுசித்தி
மேலமைவுற்றருள் யோகத்திறற்கொடுமீளிர்
வேங்கடம் புக்கார்.''

இந்த மூன்று பாசுரங்களும் பக்த மான்மியம் என்னும் புத்தகத்தில் உள்ளது. இந்த பாசுரங்கள் ஆசார்யாள் ஜம்புகேச்வரத்தில் தாடங்க பிரதிஷ்டை பண்ணியதையும், காஞ்சிபுரம் வந்து ஏகாம்பர நாதரை தரிசனம் செய்து, காமாக்ஷி ஆலயத்தில் அம்பாள் தரிசனம் காமகோடியந்திர ஸ்தாபனமும் செய்து, ஸர்வதேவாலய ஜீர்ணோத்தாரணமும் செய்து காமாக்ஷி ஆலயத்தின் கீழுள்ள குகையில் வெகுகாலம் வஸித்து, ஸகல வித்யைகளையும் ஸித்திபெற்றதாயும் கூறுகிறது. ஸ்ரீ ஆசார்யாள் காஞ்சிக்ஷேத்திரத்தை யடைந்து அம்பாள் உக்ர கலையை அடக்கி, காமகோடிபீடம் என்னும் ஸ்ரீசக்ரத்தை ஸ்தாபித்து, தான் வாஸம் செய்வதற்கு மோக்ஷபுரியான காஞ்சிக்ஷேத்ரமே தக்க இடமென நிச்சயித்து அங்கு மடத்தை ஏற்படுத்தி கைலாஸத்திலிருந்துகொண்டு வந்த ஸ்படிக லிங்க சந்த்ர மௌளீச்வர பூஜையும் ஸ்ரீ சக்ர மேரு பூஜையும் நடத்திக்கொண்டு அத்வைதாத்ம ஸாக்ஷாத்காரத்துடன் விளங்கி வந்தார்கள்.

17. பரகாய பிரவேசம்:

ஸ்ரீ ஆசார்யாள் காஞ்சி காமாக்ஷி ஸன்னதியில் ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்ய எத்தனிக்கையில் ஸரஸ்வதி தான் கேட்ட காம சாஸ்த்ர ஸந்தேஹங்களுக்குப் பதில் சொல்லிய பிறகே ஸர்வக்ஞனுவாய் என்று சொன்னுள், ஆசார்யாள் பிரம்மசர்யத்திலிருந்தே ஸன்யாஸம் பெற்றவர்கள் ஆனபடியால் அதையறிந்தே பதில் சொல்ல நினைத்து, தன் சரீரத்தை ஜாக்ரதையாய் காப்பாற்றும்படி சிஷ்யர்களுக்கு ஆக்ஞாபித்து விட்டு, அந்த

ஸமயம் மத்ய தேசத்தில் அரசனுயிருந்து மரித்துப்போன அமருகன் என்னும் ராஜாவின் சரீரத்தில் பிரவேகித்து ராஜசரீரத்துடன் ராஜ்ய பரிபாலனமும் அந்தபுர ஸ்த்ரீ ஜன ஸமாகமும் அடைந்து, இதுவரையில் ஒருவராலும் செய்ய முடியாத அளவில் ஸகலகார்யங்களையும் செய்து வந்தார்கள். அந்த ராஜாவின் மஹிஷிகள் இவருடைய புத்தி விசேஷத்தையும், ராஜ்யம் அடைந்திருக்கும் மேன்மையையும் கண்டு இவர் அரசனல்ல, யாரோ யோகி, இவரை இந்த ராஜ சரீரத்திலேயே நிறுத்திவிட வேண்டுமென்று தீர்மானித்தவர்களாய் மந்த்ரிகளைக் கூப்பிட்டு உயிரற்ற சரீரம் எங்கிருந்தாலும் தஹனம் செய்து விடுங்கள் என்று ஆக்ஞாபித்தார்கள். ராஜஸேவகர்கள் அப்படியே செய்துகொண்டு வந்து ஒரு மலைக்குஹையில் சிஷ்யர்களால் ரக்ஷிக்கப்பட்டு வரும் ஆசார்ய சரீரத்தை பலாத்காரமாய் தஹனம் செய்துவிட்டார்கள். ஆசார்ய சிஷ்யர்கள் உடனே அரண்மனை ஸமீபம் வந்து 'தத்வமஸி' என்னும் வாக்யங்களைச்சொல்லி ஆசார்யாளுக்கு ஞாபகப் படுத்தினர்கள். உடனே ஆசார்யாள் ராஜ சரீரத்தை விட்டுக் கிளம்பி, கொஞ்சம் வெந்துபோயிருந்த தன் சரீரத்தில் பிரவேசித்து லக்ஷ்மீ நரசிம்மனை ஸ்தோத்ரம் செய்தார்கள்.

" श्रीमत्पयोनिधि निकेतन चक्रपाणे
भोगीन्द्रभोगमणिरंजित पुण्यमूर्ते ।
योगीशशाश्वत शरण्य भवाब्धिपोत-
लक्ष्मीनृसिम्ह ममदेहि करावलम्बम् " ॥

" பாற்கடலில் வஸிப்பவனே! சக்ராயுதத்தைத் தரித்தவனே! உயர்ந்த நாக ரத்னத்தால் பிரகாசிக்கிற புண்யமூர்த்தியே! யோகீஶ்வரர்களுக்கு சாச்வத சரண்யனே! ஸம்ஸாரக் கடலுக்கு ஓடமானவனே! ஹே லக்ஷ்மீ

நரஸிம்ஹா! எனக்கு கை கொடுப்பாயாக'' என்று அநேகம் சுலோகங்களோடுகூடிய ''லக்ஷ்மீந்ருஸிம்ஹ கராவலம்ப ஸ்தோத்ரம்'' செய்தார்கள். நரஸிம்மன் பிரத்யக்ஷமாகி நல்ல சரீரத்தைக் கொடுத்து அனுக்ரஹம் செய்தார்.

18. ஸர்வக்ஞ பீடாரோஹணம்:

ஆசார்யாள் காஞ்சி க்ஷேத்ரம் அடைந்து, ஸரஸ்வதி கேட்ட காம சாஸ்திர ஸந்தேஹங்களுக்கு பதில் சொன்னார்கள். மேலும், தாம்ப்ரபர்ணீ தீரத்திலிருந்து வந்தவர்களையும் வாதத்தில் ஜயித்து ஒருவரும் நிகரில்லாத ஸர்வக்ஞாளாய் ஸ்ரீசங்கரபகவத் பாதாசார்யாள், தேவர்கள் புஷ்ப வர்ஷம் வர்ஷிக்க, வாத்யங்கள் முழங்க, காஞ்சி காமாக்ஷி ஸன்னிதியில் ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்தார்கள். ஆசார்யாள் காஞ்சியில் காமகோடி பீடாதிபதிகளாக இருந்து ஆங்காங்கு ஸ்தாபித்த மடங்கள் முதலியவைகளை தகுந்த சிஷ்யர்களைக்கொண்டு பரிபாலிக்கச் செய்து, சந்த்ரமௌளீச்வர யோக லிங்கத்தை ஆராதித்து பரமானந்த அத்வைத ஆத்ம ஸாக்ஷாத்காரத்தையனுபவித்து, பிறகு அவதார பிரயோஜனம் முடிந்துவிட்டபடியால் தனக்கு அடுத்த சிஷ்யரும் வார்த்திகம், நைஷ்காம்ய ஸித்தி முதலிய கிரந்தங்களைச் செய்தவருமான ஸ்ரீ ஸுரேச்வராசார்யாளை காமகோடி பீடாதிபதியாகவும் சந்த்ரமௌளீச்வர பூஜையும் ஸ்ரீ சக்ரமேரு பூஜையும் நடத்தி லோக க்ஷேமார்த்தம், அத்வைத க்ஞான வித்யையை சிஷ்யர்களுக்கு உபதேசித்துக்கொண்டு இந்த்ர ஸரஸ்வதி என்னும் பட்டத்துடன் இருக்கும்படியும் ஆஞ்ஞாபித்து, காஞ்சீ க்ஷேத்ரத்தில் யோகபலத்தால் ஸ்தூல சரீரத்தை ஸூக்ஷ்மத்தில் லயிக்கச் செய்து, ஸூக்ஷ்மத்தையும் காரணத்தில் லயிக்கச் செய்து அதையும் விட்டு சின்மயமாக ஸர்வ வ்யாபியாக இன்றும் விளங்கி வருகிறார்கள்.

சுபம்!

காமகோடி பீடம்

ஒரு அனுபந்தம்.

காஞ்சி க்ஷேத்ரத்தில் ஸ்ரீ பகவத் பாதாசார்யாள் காமகோடி பீடத்தை பிரதிஷ்டைபண்ணி மடஸ்தாபனம்செய்த விஷயங்கள் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. "ஆனந்தகிரீய சங்கர திக்விஜயத்தில்" காஞ்சியில் ஆசார்யாள் காமகோடி பீடத்தை ஸ்தாபித்து, தான் கொஞ்சநாள் இருந்து பிறகு ஸுரேச்வரரைக் கூப்பிட்டு பீடாதிபதியாக இருந்து, யோகலிங்க சந்த்ரமௌளீச்வர பூஜையையும் நடத்திவா என்று ஆஞ்ஞாபித்ததாகச்சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் நைஷதகாவ்யத்தில் ஸ்ரீ ஹர்ஷன் "**स्फटिक भूर्जागर्तियोगेश्वरः**" என்று சொல்லியிருப்பது ஆசார்யாள் பூஜித்த யோகலிங்க சந்த்ரமௌளியைக் குறிக்கிறது. மேலும் ஸ்ரீ ஹர்ஷன் "**अद्वैततत्त्वइव-सत्यतरेपिलोकः**" என்று அத்வைத வித்யையைப் புகழ்கிறார். மேலும் இந்த மடத்தைப்பற்றிய சிலசாஸனங்கள் உள்ளதாய் தெரிகிறது. 13-அம் நூற்றாண்டில் காஞ்சியில் ஆண்டுவந்த சோழமன்னன் ஒரு கிராமத்தை காமகோடிபீட மடத்திற்குக் கொடுத்ததாயும், இந்தமடம் ஹஸ்தி கிரிநாதர் கோவிலுக்கு மேற்கில் இருப்பதாயும் ஒரு சாஸனம் சொல்லுகிறது.' விஜயநகர சாம்ராஜ்யம் இருந்த காலத்தில் கிருஷ்ணதேவராயரும், அவர் பிதா நரஸிம்ம தேவராயரும் செங்கல்பட்டு ஜில்லாவிலும் 6-முழுக் கிராமங்களை காஞ்சி ஸ்ரீ மஹாதேவ ஸரஸ்வதி, ஸ்ரீ சந்த்ரசூட ஸரஸ்வதி, ஸ்ரீ ஸதாசிவ ஸரஸ்வதி ஆசார்யார்கள் காலத்தில் கொடுத்திருக்கிறார்கள். 17-ஆம் நூற்றாண்டில் கோல்கொண்டா ராஜ்ய மந்திரிகளான அக்கன்னா மாதன்னா என்பவர்கள் காஞ்சி சாரதா

மடத்திற்கு ஒரு கிராமம் கொடுத்து இருப்பதாகத் தெரிகிறது. மதுரை ராணிமங்கம்மாளின் புத்திரர் விஜய சொக்க நாய்க்கர் திருச்சி ஜில்லாவில் 6- கிராமங்களில் சில நிலங்களை லோககுரு சங்கராசார்ய ஸ்வாமிகளுக்குக் கொடுத்திருக்கிறார். 1710ஞ முகம்மதியராஜ்யத்தில் ஆலங்கிர் என்பவரின் உத்திரவின்பேரில் செங்கற்பட்டு ஜில்லாவில் ஒரு கிராமத்திலிருந்து 115–வராகன் வருஷ வர்த்தனையாகக் கொடுக்கும்படி ஒரு சாஸனம் ஏற்பட்டது. இம்மாதிரி பல சாஸனங்களிலிருந்து 1710 ஞ வரை காஞ்சீபுரத்தில் இந்த மடம் இருந்ததாயும், பிறகு கர்நாடக யுத்தகாலத்தில் காஞ்சியைவிட்டு தெற்கே பாளையக்காரர்கள் ஆதரவில் இருந்து, கடைசியாக 1730 ஞ வாக்கில் தஞ்சாவூர் அரசரின் ஆதரவில் கும்பகோணம் போய்ச் சேர்ந்ததாகத் தெரிகிறது. ஸ்ரீ சங்கரர் காஞ்சியை அடைந்தது, காமாக்ஷியை பிரதிஷ்டை செய்தது, அங்கேயே ஸித்தியடைந்தது இவை பற்றி " ஹுல்ஷ் " என்பவர் தன் ரிபோர்ட்டில் சொல்லியிருக்கிறார். 1946-ம்ஞ கூட்லி சிருங்கேரி மடத்தார் வெளியிட்டுள்ள " குருபரம்பரா ஸ்தோத்திர மாலையில் " உள்ளதும் இதை ஊர்ஜிதப்படுத்துகிறது. காஞ்சி காமாக்ஷி கோயிலில் இருக்கும் ஆசார்யமூர்த்தியைத் தவிர, செங்கற்பட்டு ஜில்லாவில் திருவொற்றியூர், மாங்காடு, பூந்தமல்லி, பாப்பான் ஸத்ரம், கடம்பர் கோவில், முதலிய இடங்களில் உள்ள கோவில்களில் ஆசார்யாளின் மூர்த்திகள் இருக்கின்றன. இம்மாதிரி பல தகவல்கள் காஞ்சியில் காமகோடி பீட மடத்தை நன்கு ஊர்ஜிதம் செய்கிறது.

இந்த பீடத்தில் இப்பொழுது பீடாதிபதியாக ஆசார்ய ஸ்தானத்தை வஹிக்கும் ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ பகவத்பாதாளின் அவதார பூதர்கள் என்று

சொல்லக்கூடிய ஹேதுக்களிருக்கின்றன. பகவத்பாதாள் நடத்திய திருவானைக்காவல் அகிலாண்டேச்வரீ தாடங்க ப்ரதிஷ்டையை இவர்கள் செய்தது ஓர் உதாஹரணம். மேலும், தஞ்சாவூர் பங்காரு காமாக்ஷி கும்பாபிஷேகம், காஞ்சி காமாக்ஷியின் மஹா கும்பாபிஷேகம், ஸ்ரீ சக்ர ரூபமான வெள்ளிரத நிர்மாணம் இவைகள் குறிப்பிடத் தக்க தெய்வீகச் செயல்கள். இவர்களை ஒரு முறை தரிசனம் செய்தவர்கள் "ஆசார்யாள் என்னிடத்தில் தான் அதிக பிரியமுள்ளவர்கள்" என்று சொல்லத் தவருவது இல்லை. இவர்கள் பெரிய சாஸ்த்ரங் களையும் ஸுலபமான முறையில் உபதேசிப்பார்கள். இவர்கள் உபதேசத்தின் ஒரு பகுதி "நாம் அத்வைதத்தை நம்பிக்கொண்டு துவைதத்தை அனுபவிக்கிறோம். துவைதம் இந்த்ரியங்களால் தெரிவிக்கப்படுகிறது. அத்வைதம் வேதாந்தங்களால் தெரிவிக்கப் படுகிறது. ஸூரியன் 1000-கோடி மைல் விஸ்தீரண முள்ளது என்று சாஸ்திரம் சொல்லுகிறது. ஒரு சாண் விஸ்திரணமுள்ளதென்று கண் சொல்லுகிறது. கண்ணால் தெரிவிக்கப்படுவது துவைதம், வேதாந்தத்தால் தெரிவிக்கப்படுவது அத்வைதம்." இன்னொரு உபதேசம் "இந்த விழிப்பிற்கும் ஞானத்தால் ஒரு விழிப்பு ஏற்பட்டால் அப்பொழுது இந்த விழிப்பில் காணப்படும் 1000- கணக்கான பொருள்களும் மறைந்து இப்பொழுது நானென்று சொல்லும் ஆத்மப் பொருளே பாக்கி நிற்கும். இந்த திருஷ்டாந்தத்தை அறிவுபடுத்தவே ஈச்வரன் ஸ்வப்னத்தை ஸ்ருஷ்டி செய்திருக்கிறார்." இம்மாதிரி அநேகம் உபதேச ரத்னங்கள் உண்டு. இந்த உபதேச அம்ருதத்தைப் பானம் பண்ணியவர்கள் மிகுந்த புண்ணியவான்கள் என்பதிலும், இந்த மஹாபுருஷாள் பகவத்பாதாளின் அவதாரம் என்பதிலும் ஸந்தேஹம் இருக்க முடியாது. அப்படிப்பட்ட இந்த ஆசார்யாள்

happiness, conquering death. Even the Gods adore him. (10) What is important is devotion. Other considerations and conditions of life are of no consequence. (12) One may live anywhere and follow any mode of discipline; true *yoga* is devotion to God. (9) Devotion does not consists in mere external offering of flowers, etc., to God; it is the heart-gift that is true devotion. (11) One may be a devotee in any stage of life; if one surrenders oneself to God, He is ready to take on all the burdens. (91) The end of devotion is *moksa*. Devotion to God removes the darkness of ignorance by shedding the light of wisdom.

[Reproduced from Dr. T. M. P. Mahadevan's book "*Sankara's Hymn to Siva (Sivanandalahari)* with the kind permission of the author and the Publishers M/s. Ganesh & Co., (Madras) Private Ltd., Madras-17. Copies available at their sales depots at N. S. C. B. Road, Madras-1 and Pondy Bazaar, Madras-17. Price per copy Rs. 4-00].

ஒரு வேண்டுகோள்.

நமது சபையில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தும், ப்ரவசனங்களுக்குத் தவருது விஜயம் செய்தும் சபையின் பணி மேலும் சிறந்து விளங்க உதவுமாறு ஆசார்ய பக்தர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிரோம்.

அங்கத்தினர் ஆண்டுசந்தா ரூ. 3-00.
போஷகர் ஆண்டுசந்தா ரூ. 24-00.

॥ श्रीः ॥

சிவானந்தலஹரீ

தமிழ் உரை : ஆங்கீரஸன்.

कलाभ्यां चूडालंकृतशशिकलाभ्यां निजतपः-
फलाभ्यां भक्तेषु प्रकटितफलाभ्यां भवतु मे ।
शिवाभ्यामस्तोकत्रिभुवनशिवाभ्यां हृदि पुन-
र्भवाभ्यामानन्दस्फुरदनुभवाभ्यां नतिरियम् ॥ १

கலாப்யாம் சூடாலங்க்ருத ஶஶி கலாப்யாம் நிஜதப:
பலாப்யாம் பக்தேஷு ப்ரகடித பலாப்யாம் பவது மே |
ஶிவாப்யாமஸ்தோக த்ரிபுவந ஶிவாப்யாம் ஹ்ருதிபுநர்
பவாப்யாம் ஆனந்த ஸ்புரதனுபவாப்யாம் நதிரியம் ||

ஸகல கலைகளையும் ஸ்வரூபமாக உடையவர்களாயும், அலங்காரமாக சந்திரகலைகளை சிரங்களிலே தரித்தவர்களாயும், ஒருவருக்கொருவர் செய்த தவத்தின் பல ஸ்வரூபர்களாகத் தோன்றுகின்றவர்களாகவும், பக்தர்களிடத்திலே அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களைப் பிரகாசப்படுத்துகிறவர்களாகவும், மூன்று லோகங்களுக்கும் எல்லையில்லாத மங்களத்தை அளிக்கின்றவர்களாகவும், ஹ்ருதயகமலத்திலே தியான ஸமயத்தில் புதிது புதிதாகப் பிரகாசிக்கின்றவர்களாயும், பிரம்மானந்த அனுபவமே ஸ்வரூபமாக உடையவர்களான பார்வதி பரமேஶ்வரர்களுக்கு இந்த என்னுடைய நமஸ்காரம் உரித்தாகட்டும்.

गलन्ती शंभो त्वच्चरितसरितः किल्बिषरजो
दलन्ती धीकुल्यासरणिषु पतन्ती विजयताम् ।

दिशन्ती संसार भ्रमण परितापोपशमनम्
वसन्ती मच्चेतोहृदभुवि शिवानन्दलहरी ॥ २

கலந்தீ ஶம்போ த்வச்சரித ஸரித: கில்பிஷரஜோ
தலந்தீ தீகுல்யா ஸரணிஷு பதந்தீ விஜயதாம் ।
திஶந்தீ ஸம்ஸாரப்ரமண பரிதாபோப ஶமனம்
வஸந்தீ மச்சேதோ ஹ்ருதபுவி ஶிவானந்தலஹரீ ॥

ஸுகத்தை அளிக்கும் பரம்பொருளே ! உன்னுடைய சரித்திரமாகிய நதியிலிருந்து பெருகிவருவதும், பாவத்தைப் போக்கடிக்கின்றதாயும், புத்தி என்கிற வாய்க்கால் வழியாக ஓடி விதவிதமான தடாகங்களில் விழுவதும், ஸம்ஸார சக்ரத்தில் சுழல்வதால் ஏற்படும் துக்கத்திற்கு ஶாந்தியைக் கொடுப்பதாகவும், என்னுடைய மனமென்னும் மடுவிலே வஸிக்கின்றதாயுமிருக்கின்ற ஶிவானந்தப் பிரவாஹம் (ஶிவானந்தலஹரீ) சிறந்து விளங்கட்டும்.

त्रयीवेद्यं हृद्यं त्रिपुरहरमाद्यं त्रिणयनं
जटाभारोदारं चलदुरगहारं मृगधरम् ।
महादेवं देवं मयि सदयभावं पशुपतिं
चिदालम्बं साम्बं शिवमतिविडम्बं हृदि भजे ॥ ३

த்ரயீவேத்யம் ஹ்ருத்யம் த்ரிபுரஹரமாத்யம் த்ரிணயநம்
ஜடா பாரோதாரம் சலதுரகஹாரம் ம்ருகதரம் ।
மஹாதேவம் தேவம் மயி ஸதயபாவம் பஶுபதிம்
சிதாலம்பம் ஸாம்பம் ஶிவமதிவிடம்பம் ஹ்ருதி பஜே ॥

மூன்று வேதங்களினாலும் அறியப்படுபவனாகவும் மனதை ஆனந்திக்கச் செய்கிறவனாகவும், முப்புரங்களை எரித்தவனாகவும், எல்லாவற்றிற்கும் ஆதியாகவுள்ளவனாகவும், முக்கண்ணனாக இருப்பவனும் ஜடாபாரத்தைத் தரித்தவனாகவும், ஸர்ப்பங்களை மாலைகளாக அணிந்திருப்

பவனுயும், கையில் மானைத்தரித்தவனுக இருப்பவனும் சகலதேவர்களுக்கும் மேலானவனுகவும் பிரகாசத்தோடு கூடினவனுகவும், என்னிடம் கருணையுடன் கூடிய பாபத்தை உடையவனுகவும், பசுபதியாகவும், ஞானத்திற்கு ஆஶ்ரயமாக இருப்பவனும், அம்பிகையுடன் கூடினவனுயும், நாட்டியம் செய்பவனுயுமிருக்கின்ற மங்கள ஸ்வரூபியான பரமேஶ்வரனை என்னுடைய ஹிருதயத்திலே தியானம் செய்கிறேன்.

सहस्रं वर्तन्ते जगति विबुधाः क्षुद्रफलदाः
न मन्ये स्वप्ने वा तदनुसरणं तत्कृतफलम् ।
हरिब्रह्मादीनामपि निकटभाजामसुलभं
चिरं याचे शंभो शिव तव पदाम्भोजभजनम् ॥ ४

ஸஹஸ்ரம் வர்த்தந்தே ஜகதி விபுதா: க்ஷுத்ரபலதா:
நமன்யே ஸ்வப்னேவா ததனுஸரணம் தத்க்ருதபலம் ।
ஹரிப்ரம்மா தீநாமபி நிகடபாஜாமஸுலபம்
சிரம் யாசே ஶம்போ ஶிவ தவ பதாம்போஜபஜனம் ॥

அல்பமான பலனைக் கொடுக்கின்ற தேவதைகள் லோகத்தில் ஆயிரக்கணக்கில் இருக்கின்றுகள். அவைகளுடைய ஆராதனத்தையோ, அவைகளால் அளிக்கப்பட்ட பலனையோ கனவில் கூட நான் எண்ணவில்லை. ஹே ஶம்போ! ஹே சிவ! உன் ஸமீபத்தில் இருப்பவர்களான விஷ்ணு, பிரம்மா முதலிய தேவர்களுக்கும் கூட துர்லபமான உன்னுடைய பாதத்தாமரைகளின் ஆராதனத்தை வெகுகாலமாகயாசிக்கின்றேன். (அருள்வாயாக என்றபடி)

स्मृतौ शास्त्रे वैद्ये शकुनकवितागानफणितौ
पुराणे मन्त्रे वा स्तुतिनटनहास्येष्वचतुरः ।

कथं राज्ञां प्रीतिर्भवति मयि कोऽहं पशुपते
पशुं मां सर्वज्ञ प्रथितकृपया पालय विभो ॥ ५

ஸ்ம்ருதௌ ஶாஸ்த்ரே வைத்யே ஶகுனகவிதாகானபணிதௌ
புராணே மந்த்ரே வா ஸ்துதி நடன ஹாஸ்யேஷ்வசதுர:
கதம் ராக்ஞாம் ப்ரீதிர்பவதி மயி கோஹம் பஶுபதே
பஶும் மாம் ஸர்வக்ஞ ப்ரதித க்ருபயா பாலயவிபோ ॥

ஸ்ம்ருதிகள், சாஸ்த்ரங்கள், வைத்தியம், சகுன சாஸ்த்ரம், கவிதை, சங்கீதம், புராணங்கள், ஸ்தோத்ரம் செய்தல், நாட்டியம் செய்தல், ஹாஸ்யம் முதலியவைகளில் நான் ஸாமர்த்யமற்றவன். என்னிடத்தில் பிரபுக்களுக்கு எவ்விதம் ப்ரீதி ஏற்படும்? ஹே பஶுபதே! விபோ! ஸர்வக்ஞ! ஒன்றும் அறியாத பசுவாகிய என்னைப் பிரஸித்தமான உன்னுடைய கிருபையினால் ரக்ஷித்து அருளவேண்டும்.

घटो वा मृत्पिण्डोऽप्यणुरपि च धूमोऽग्निरचलः
पटो वा तन्तुर्वा परिहरति किं घोरशमनम् ।
वृथा कण्ठक्षोभं वहसि तरसा तर्कवचसा
पदाम्भोजं शंभोर्भज परमसौख्यं व्रज सुधीः ॥ ६

கடோவா ம்ருத்பிண்டோப்யணுரபிச தூமோக்னிரசல:
படோவா தந்துர்வா பரிஹரதி கிம் கோர ஶமனம் ।
வ்ருதா கண்டக்ஷோபம் வஹஸி தரஸா தர்க்கவசஸா
பதாம்போஜம் ஶம்போர்பஜ பரமஸௌக்யம் வ்ரஜஸுதீ:

ஹே நிர்மலமான புத்தியே! குடங்களோ, மண்ணினுடைய கார்யமோ, தவிரவும் அணுவோ, புகையோ, அக்னியோ மலையோ, வஸ்த்ரங்களோ, நூல்களோ இவைகள் பயங்கரமானதும் கோரமானதுமான யமபாதையைப்

பரிஹாரம் செய்யக்கூடுமா? தர்க்க வார்த்தைகளால் வீண் கண்ட க்ஷோபத்தைத்தான் வகிக்கிருய். சம்புவினுடைய திருச்சரணாரவிந்தங்களை பஜனம் செய்வாயாக. பரமஸௌக்யமான மோக்ஷம் என்ற நிலையை அடைவாயாக. (வீண் தர்க்கங்களில் ஈடுபட்டு வீணாக காலங்கழிக்காது பரமேஶ்வரனிடத்தில் பக்தி செலுத்த வேண்டும் என்றவாறு)

मनस्ते पादाब्जे निवसतु वचः स्तोत्रफणितौ
करौ चाभ्यर्चायां श्रुतिरपि कथाकर्णनविधौ ।
तव ध्याने बुद्धिर्नयनयुगलं मूर्तिविभवे
परग्रन्थान्कैर्वा परमशिव जाने परमतः ॥ ७

மநஸ்தே பாதாப்ஜே நிவஸதுவச: ஸ்தோத்ர பணிதௌ
கரௌ சாப்யர்ச்சாயாம் ஶ்ருதிரபி கதாகர்ணன விதௌ।
தவத்யானே புத்தி: நயநயுகளம் மூர்த்தி விபவே
பரக்ரந்தான் கைர்வா பரமஶிவ ஜாநே பரமத: ॥

ஹே பரமேஶ்வரனே! மனம் உன்னுடைய திருவடித் தாமரையிலும், வாக்கு உன்னைத் துதிப்பதிலும், இரு கரங்களும் உன்னை அர்ச்சனை செய்வதிலும், காதுகள் உன்னுடைய கதையைக் கேட்பதிலும், புத்தி உன்னுடைய தியானத்திலும், இரு கண்களும் உன்னுடைய திவ்ய ரூபத்தைப் பார்ப்பதிலும் இருந்துவரட்டும். அப்படி இருந்தால் வேறு எந்த இந்த்ரியங்களைக் கொண்டு நான் அஸத் கார்யங்களை அறியப்போகிறேன்.

यथा बुद्धिः शुक्तौ रजतमिति काचाश्मनि मणि-
र्जले पैष्टे क्षीरं भवति मृगतृष्णासु सलिलम् ।

तथा देव भ्रान्त्या भजति भवदन्यं जडजनो
महादेवेशं त्वां मनसि च न मत्वा पशुपते ॥ ८

யதா புத்தி: ஶுக்தௌ ரஜதமிதி காசாஶ்மநிமணிர்
ஜலே பைஷ்டே க்ஷீரம்பவதி ம்ருகத்ருஷ்ணாஸு ஸலிலம் ।
ததா தேவப்ராந்த்யா பஜதி பவதந்யம் ஜடஜநோ
மஹாதேவேஶம் த்வாம் மநஸி ச ந மத்வா பஶுபதே ॥

ஹே மஹா தேவா! கிளிஞ்சலை வெள்ளியென்றும் கண்ணாடிச்சில்லை வைரமென்றும், மாவு கரைத்த ஜலத்தைப் பாலென்றும், கானல் நீரை ஜலமென்றும் புத்தியில் எவ்விதம் தோன்றுகிறதோ அவ்விதமே மூட ஜனம், ஹே பஶுபதே! ஸர்வேஶ்வரனான உன்னை மனதில் கூட நினைக்காமல் உனக்குவேறான வஸ்துவை ஈஶ்வரன் என்று மயக்கத்தினால் பஜிக்கின்றது.

गभीरे कासारे विशति विजने घोरविपिने
विशाले शैले च भ्रमति कुसुमार्थं जडमतिः ।
समर्प्यैकं चेतः सरसिजमुमानाथ भवते
सुखेनावस्थातुं जन इह न जानाति किमहो ॥ ९

கபீரே காஸாரே விஶதி விஜநே கோரவிபிநே
விஶாலே ஶைலே ச ப்ரமதி குஸுமார்த்தம் ஜடமதி: ।
ஸமர்ப்யைகம் சேதஸ்ஸரஸிஜமுமாநாத பவதே
ஸுகேநாவஸ்தாதும் ஜந இஹ ந ஜாநாதி கிமஹோ ॥

ஹே உமாபதே! ஜனங்கள் புஷ்பங்களுக்காக ஆழமான தடாகத்திலும், ஜன சஞ்சாரமற்ற பயங்கரமான காட்டிலும், விசாலமான மலையிலும் பிரவேசிக்கிறார்கள். சுற்றுகிறார்கள். அவர்கள் விவேகமற்றவர்கள். தன்னுடைய மனம் என்ற ஒரே தாமரைப் புஷ்பத்தை

உன்பொருட்டு அர்ப்பணம் செய்துவிட்டு இருந்தஇடத்தி லேயே ஆனந்தமாக இருப்பதற்கு ஏன் இந்த லோகம் அறியவில்லை? ஆச்சர்யம்!

नरत्वं देवत्वं नगवनमृगत्वं मशकता
पशुत्वं कीटत्वं भवतु विहगत्वादिजननम् ।
सदा त्वत्पादाब्जस्मरणपरमानन्दलहरी-
विहारासक्तं चेद्धृदयमिह किं तेन वपुषा ॥ १०

நரத்வம் தேவத்வம் நகவனம்ருகத்வம் மஶகதா
பசுத்வம் கீடத்வம் பவது விஹகத்வாதி ஜனனம் ।
ஸதா த்வத் பாதாப்ஜஸ்மரண பரமானந்த லஹரீ
விஹாராஸக்தம் சேத்ருதய மிஹ கிம் தேந வபுஷா ॥

மனிதத்தன்மை, தேவத்தன்மை, மலைக்காடுகளில் மிருகங்களாக இருக்கும் தன்மை, கொசுவாக இருக்கும் தன்மை, பசு, புழு, பக்ஷியின் தன்மை, முதலிய எப் பிறப்பாவது உண்டாகட்டும். மனமானது எப்பொழு தும் உன்னுடைய தாமரைப் புஷ்பங்கள் போன்ற திரு வடிகளை ஸ்மரணம் செய்வதினால் உண்டாகும் ஆனந்த ப்ரவாஹத்தில் க்ரீடிப்பதில் ஆவல் உள்ளதாக மட்டும் இருக்கும் பக்ஷத்தில் அச்சரீரத்தினால் வரக்கூடிய துக் கம் என்ன இருக்கிறது? (ஒன்றுமில்லை என்றவாறு)

वटुर्वा गेही वा यतिरपि जटी वा तदितरो
नरो वा यः कश्चिद्भवतु भव किं तेन भवति ।
यदीयं हृत्पद्मं यदि भवदधीनं पशुपते
तदीयस्त्वं शंभो भवसि भवभारं च वहसि ॥ ११

வடுர்வா கேஹீவா யதிரபி ஜடீவா ததிதரோ
நரோவா ய: கஸ்சித் பவது பவகிம் தேந பவதி ।
யதீயம் ஹ்ருத்பத்மம் யதி பவததீனம் பஶுபதே
ததீயஸ்த்வம் ஶம்போ பவஸி பவபாரம் ச வஹஸி ॥

ஹே பரமேஶ்வரனே! பிரம்மசாரியோ, கிரஹஸ்தனோ, ஸன்யாஸியோ, ஜடையோடு கூடிய வானப்பிரஸ்தனோ, வேறு எந்த மனிதனோவாக இருக்கட்டும். அதனால் என்ன? எவனுடைய ஹிருதயத் தாமரை உன்னுடைய வஶத்தில் இருக்குமானால் ஹே ஶம்போ! நீ அவனைச் சேர்ந்தவனாக ஆகிறாய். அவனுடைய ஸம்ஸார பாரத்தையும் நீ வஹிக்கிறாய்.

गुहायां गेहे वा बहिरपि वने वाऽद्रिशिखरे
जले वा वह्नौ वा वसतु वसतेः किं वद फलम् ।
सदा यस्यैवान्तःकरणमपि शंभो तव पदे
स्थितं चेद्योगोऽसौ स च परमयोगी स च सुखी १२

குஹாயாம் கேஹேவா பஹிரபி வநேவாத்ரி சிகரே
ஜலேவா வஹ்நௌவா வஸது வஸதே: கிம்வதபலம் ।
ஸதா யஸ்யைவாந்த:கரணமபி ஶம்போ தவ பதே
ஸ்திதம் சேத்யோகோஸௌ ஸ ச பரமயோகீ ஸசஸுகீ ॥

மலைக்குகை, வீடு, வெளி, காடு, மலைச்சிகரம், ஜலம், நெருப்பு, இவைகள் மீது வசிக்கட்டும். ஹே ஶம்போ! அவ்விதம் அவைகளில் வசிப்பதால் உண்டாகும் பலன் என்ன? சொல்வாயாக! எவனுடைய மனமுங் கூட ஸதா உன்னுடைய பாதாரவிந்தங்களிலேயே நிலைத்திருக்குமேயானல் அது தான் யோகம். அவன் தான் யோகி. அவனே தான் ஸுகத்தை அடைந்தவனாவான்.

असारे संसारे निजभजनदूरे जडधिया
भ्रमन्तं मामन्धं परमकृपया पातुमुचितम् ।
मदन्यः को दीनस्तव कृपणरक्षातिनिपुण-
स्त्वदन्यः को वा मे त्रिजगति शरण्यः पशुपते ॥१३

அஸாரே ஸம்ஸாரே நிஜபஜனதூரே ஜடதியா
ப்ரமந்தம் மாமந்தம் பரமக்ருபயா பாது முசிதம் ।
மதந்ய: கோ தீனஸ்தவ க்ருபண ரக்ஷாதி நிபுண
ஸ்த்வதன்ய: கோ வா மே த்ரிஜகதி ஶரண்ய: பஶுபதே

ஹே பஶுபதே! ஸாரமற்றதும் ஆத்மஸ்வரூபத்தை தியானம் செய்ய ப்ரஸக்தியேயில்லாமல் வெகு தூரத்தில் இருக்கின்றதுமான இந்த ஸம்ஸாரத்தில் அறிவின்மையால் சுழன்றுகொண்டு குருடனுயு மிருக்கிற என்னைப் பரம கருணையினுல் காப்பாற்றுவது உசிதமாகும். ஏனெனில் என்னைவிட உன்னுல் ரக்ஷிக்கப்பட வேண்டிய எளியவன் எவன்? உன்னைத் தவிர வேறு எந்த தெய்வம் தின ஜனங்களை ரக்ஷிப்பதில் சாமர்த்யமுடையது. எனக்கு ரக்ஷகன் மூன்று உலகிலும் யார் இருக்கிருர்கள். (ஆகையால் நீயே ரக்ஷிக்க வேண்டும் என்றவாறு)

प्रभुस्त्वं दीनानां खलु परमबन्धुः पशुपते
प्रमुख्योऽहं तेषामपि किमुत बन्धुत्वमनयोः।
त्वयैव क्षन्तव्याः शिव मदपराधाश्च सकलाः
प्रयत्नात्कर्तव्यं मदवनमियं बन्धुसरणिः ॥ १४

ப்ரபுஸ்த்வம் தீநாநாம் கலு பரம பந்து: பஶுபதே
ப்ரமுக்யோஹம் தேஷாமபி கிமுதபந்துத்வ மனயோ: ।
த்வயைவ க்ஷந்தவ்யா: சிவமதபராதாஶ்ச ஸகலா:
ப்ரயத்நாத் கர்த்தவ்யம் மதவனமியம் பந்துஸரணி: ॥

ஹே பஶுபதே! பிரபுவாகிய நீ தீன ஜனங்களுக்கு எல்லாம் மேலான பந்து என்பது பிரசித்தமானதல்லவா? அந்த தீன ஜனங்களுக்குள் நான் மிகவும் முக்கிய மானவன். நமக்குள் இருக்கும் பந்துத்வத்தை விரித்துரைக்க வேண்டுமா? என்னுடைய சகலவிதமான குற்றங்களும் உன்னால்தான் க்ஷமிக்கத் தகுந்தவைகள். என்னை ரக்ஷிப்பதும் கூட நீ முயற்சியுடன் செய்ய வேண்டியதேயாகும். இதுதான் பந்துக்களுடைய கடமை ஆகும்.

उपेक्षा नो चेत्किं न हरसि भवद्ध्यानविमुखां
दुराशाभूयिष्ठां विधिलिपिमशक्तो यदि भवान् ।
शिरस्तद्वैधात्रं न न खलु सुवृत्तं पशुपते
कथं वा निर्यत्नं करनखमुखेनैव लुलितम् ॥ १५

உபேக்ஷா நோசேத்கிம் ந ஹரஸி பவத்த்யானவிமுகாம்
துராஶா பூயிஷ்டாம் விதிலிபிமஶக்தோ யதிபவாந் ।
ஶிரஸ்தத்வைதாத்ரம் ந நகலு ஸுவ்ருத்தம் பஶுபதே
கதம் வா நிர்யத்னம் கரநக முகேநைவ லுலிதம் ॥

ஹே பஶுபதே! என்னிடத்தில் உனக்கு வெறுப்பு இல்லாமலிருந்தால் துராஶா பூயிஷ்டமானதும் உன்னுடைய தியானத்தினின்றும் வேறு முகமாயுமிருக்கின்ற பிரும்மாவினால் எழுதப்பட்ட என் தலையெழுத்தை ஏன் அழிக்கவில்லை? தாங்கள் இத்தலையெழுத்தை அழிக்க சக்தியில்லாமல் இருந்தால், நகத்தினால் கிள்ளமுடியாததும், கடினமானதுமான பிரம்மனுடைய ஐந்தாவது தலை எவ்விதம் உன்னுடைய கை நக நுனியால், சிறிதும் யத்னமில்லாமல் கிள்ளப்பட்டது.

विरिञ्चिर्दीर्घायुर्भवतु भवता तत्परशिर-
श्चतुष्कं संरक्ष्यं स खलु भुवि दैन्यं लिखितवान् ।

विचारः को वा मां विशदकृपया पाति शिव ते
कटाक्षव्यापारः स्वयमपि च दीनावनपरः ॥ १३

விரிஞ்சிர் தீர்காயுர்பவது பவதா தத்பர ஶிரஶ்
சதுஷ்கம் ஸம்ரக்ஷ்யம் ஸகலு புவி தைன்யம்லிகிதவான்
விசார: கோ வா மாம் விஶதக்ருபயா பாதி ஶிவ தே
கடாக்ஷவ்யாபார: ஸ்வயமபி ச தீநாவநபர: ॥

ஹே ஶிவ ! பிரம்மதேவன் திர்க்காயுஸ்ஸாக இருக்கட்டும். அவரது மீதியுள்ள நான்கு தலைகளும் உன்னால் ரக்ஷிக்கப்பட்டவைகளாக ஆகட்டும். இப்புவியில் தினபாபத்தை ஜனங்களின் தலையில் அந்த பிரம்மா எழுதிய விஷயம் மிக்கப்பிரசித்தி யானதன்றோ ? தினர்களைக் காப்பாற்றுவதில் விருப்பமுடைய உன்னுடைய கடாக்ஷத்தின் செயலன்றோ என்னைக் காப்பாற்றுகிறது. அங்ஙனமிருக்கும்போது விசாரம் எங்கேயிருக்கிறது? (இல்லை என்றவாறு)

फलाद्वा पुण्यानां मयि करुणया वा त्वयि विभो
प्रसन्नेऽपि स्वामिन् भवदमलपादाब्जयुगलम् ।
कथं पश्येयं मां स्थगयति नभःसंभ्रमजुषां
निलिम्पानां श्रेणिर्निजकनकमाणिक्यमकुटैः ॥ १७

பலாத்வா புண்யானும் மயி கருணயா வா த்வயிவிபோ
ப்ரஸந்நேபி ஸ்வாமிந் பவதமல பாதாப்ஜயுகளம் ।
கதம் பஶ்யேயம் மாம் ஸ்தகயதி நம: ஸம்ப்ரமஜு॰ஷாம்
நிலிம்பானும் ஶ்ரேணிர் நிஜகனக மாணிக்ய மகுடை: ॥

ஹே ஸர்வ வ்யாபியான பரம்பொருளே! புண்யங்களின் பலத்தினுலோ அல்லது என்னிடத்தில் உள்ள

கருணையினுலோ நீ அருள் புரிய பிரஸன்னமான போதிலும், ஹே ஸ்வாமின்! உன்னுடைய நிர்மலமான இரண்டு பாதாரவிந்தங்களையும் எப்படிக் காண்பேன்? உன் பாதங்களில் மிகுந்த அவஸரத்துடன் நமஸ்காரம் செய்து கொண்டிருக்கும் தேவர்களின் கூட்டங்களின் மாணிக்கத்தினுல் இழைத்த தங்கக் கிரீடங்களின் ஜோதி என் கண்களின் பார்வையை மறைத்து என்னை நடுங்கச் செய்கிறதே!

त्वमेको लोकानां परमफलदो दिव्यपदवीं
वहन्तस्त्वन्मूलां पुनरपि भजन्ते हरिमुखाः।
कियद्वा दाक्षिण्यं तव शिव मदाशा च कियती
कदा वा मद्रक्षां वहसि करुणापूरितदृशा ॥ १८

த்வமேகோ லோகாநாம் பரமபலதோ திவ்யபதவீம்
வஹந்தஸ்த்வந்மூலாம் புநரபி பஜந்தே ஹரிமுகா: ।
கியத்வா தாக்ஷிண்யம் தவஶிவ மதாஶா ச கியதீ
கதா வா மத்ரக்ஷாம் வஹஸி கருணு பூரிதத்ருஶா ॥

ஹே ஶிவ! ஸகல லோகத்திற்கும் மேலான பலனை மோக்ஷத்தை அளிப்பவன் நீ ஒருவன்தான். விஷ்ணு முதலிய தேவர்கள் உன்னுல் கிடைத்த வைகுண்டம் முதலிய திவ்யபதவிகளை வஹித்துக்கொண்டு உன்னை பஜிக்கிருர்கள். உன்னுடைய தயைக்கு அளவில்லை. என்னுடைய ஆசையும் அத்தன்மையதே. கருணை நிரம்பிய திருஷ்டியினுல் என்னைக்காப்பாற்றும் பொறுப்பை எப்போது வஹிக்கப் போகிருய்?

दुराशाभूयिष्ठे दुरधिपगृहद्वारघटके
दुरन्ते संसारे दुरितनिलये दुःखजनके ।

मदायासं किं न व्यपनयसि कस्योपकृतये
वदेयं प्रीतिश्चेत्तव शिव कृतार्थाः खलु वयम्॥१९

துராஶா பூயிஷ்டே துரதிபக்ருஹத்வார கடகே
துரந்தே ஸம்ஸாரே துரிதநிலயே துக்கஜநகே।
மதாயாஸம் கிம்ந வ்யபநயஸி கஸ்யோப க்ருதயே
வதேயம் ப்ரீதிஶ்சேத்தவ ஶிவ க்ருதார்த்தா: கலுவயம்

துராசையினுல் நிறைந்ததும், குணமற்ற துஷ்ட அரசர்கள் சேர்க்கையில் உழல்வதும், முடிவில்லாத துக்கத்திற்கும், மஹா பாபங்களுக்கும் இருப்பிடமானதும், துக்கத்தை உண்டு பண்ணுகிறதாயுமிருக்கிற ஸம்ஸாரத்தில் நான் படுகின்ற துயரத்தை பிரம்மாவுக்கு உபகாரம் செய்யும் பொருட்டு போக்கடிக்கவில்லையா? நீயே சொல், உனக்கு இந்த தீனர்களிடத்தில் அன்பு இருக்குமேயானுல் நாங்கள் எங்கள் ஜன்மாவைப் பிரயோஜனமுள்ளதாகச் செய்து கொண்டவர்களாக ஆகிவிடுவோம் அல்லவா?

सदा मोहाटव्यां चरति युवतीनां कुचगिरौ
नटत्याशाशाखास्वटति झटिति स्वैरमभितः।
कपालिन् भिक्षो मे हृदयकपिमत्यन्तचपलं
दृढं भक्त्या बद्ध्वा शिव भवदधीनं कुरु विभो॥२०

ஸதா மோஹாடவ்யாம் சரதி யுவதீனும்குசகிரௌ
நடத்யாஶாஶாகாஸ்வடதி ஜடிதி ஸ்வைரமபித:।
கபாலின் பிக்ஷோ மே ஹ்ருதயகபிம் அத்யந்தசபலம்
த்ருடம் பக்த்யா பத்த்வாஶிவ பவததீனம் குரு விபோ॥

ஹே கபாலி! ஹே ஶிவ!! ஹே விபோ!!! எப்பொழுதும் அஞ்ஞானம் என்ற வனத்திலே சஞ்சாரம்

செய்வதும், யுவதிகளின் ஸ்தனங்களாகிய மலைகளில் நடனம் செய்வதும், பலவிதமான ஆசைகள் என்ற கிளைகளிலும் நாலா பக்கங்களிலும் வேகமாகத் தன்னிச்சைப்படி கட்டில்லாமல் அலைகின்றதும், அதிகமான சஞ்சலமுள்ளதுமான என்னுடைய மனம் என்னும் குரங்கை பக்தி என்கிற கயிற்றினால் த்ருடமாகக் கட்டி உன்வசமாகச் செய்து கொள்வாயாக.

धृतिस्तम्भाधारां दृढगुणनिबद्धां सगमनां
विचित्रां पद्माढ्यां प्रतिदिवससन्मार्गघटिताम् ।
स्मरारे मच्चेतः स्फुटपटकुटीं प्राप्य विशदां
जय स्वामिन् शक्त्या सह शिवगणैःसेवितविभो ॥

த்ருதிஸ்தம்பாதாராம் த்ருடகுணநிபத்தாம் ஸகமனும்
விசித்ராம் பத்மாட்யாம் ப்ரதிதிவஸ ஸன்மார்க்ககடிதாம்
ஸ்மராரே மச்சேத: ஸ்புடபடகுடீம் ப்ராப்யவிஶதாம்
ஜய ஸ்வாமிந் ஶக்த்யா ஸஹ ஶிவகணை: ஸேவிதவிபோ

காமனை எரித்தவனே! ஸ்வாமி, சிவ கணங்களால் ஸேவிக்கப்பட்டவனே! ஸர்வ வியாபியே! என்னுடைய த்ருடமான நிச்சயத்தைத் தூணாக உடையதும், கெட்டியான ஸத்வ, ரஜஸ், தமோகுணங்களாகிய கயிறுகளால் கட்டப்பட்டதும் நினைத்த இடங்களுக்குச் செல்ல சக்தியுடையதும், விசித்ரங்கள் நிறைந்ததும், பணத்தாசையுடன் கூடியதுமான என்னுடைய மனதாகிய பிரகாசிக்கின்ற கூடாரத்தை நிர்மலமாகவும் நன் மார்க்கத்தில் சஞ்சரிக்கின்றதாயும் செய்து பராசக்தியோடு கூட அடைந்து ஜயத்துடன் விளங்குவீராக.

प्रलोभाद्यैरर्थाहरणपरतन्त्रो धनिगृहे
प्रवेशोद्युक्तः सन् भ्रमति बहुधा तस्करपते ।

इमं चेतश्चोरं कथमिह सहे शंकरविभो
तवाधीनं कृत्वा मयि निरपराधे कुरु कृपाम् ॥२२

ப்ரலோபாத்யை: அர்த்தாஹரணபரதந்த்ரோ தனிக்ருஹே
-ப்ரவேஶோத்யுக்த: ஸன் ப்ரமதி பஹுதா தஸ்கரபதே ।
இமம் சேதஸ்சோரம் கதமிஹ ஸஹே சங்கரவிபோ
தவாதீனம் க்ருத்வா மயி நிரபராதே குரு க்ருபாம் ॥

ஹே சங்கரா! விபோ ! தஸ்கர பதே ! பேராசை முதலியவைகளால் பிறரது பணங்களைக் கொண்டு வருவதில் ஈடுபட்டுக் கொண்டு பணக்காரரது வீடுகளில் பிரவேசிக்க சமயம் பார்த்துக் கொண்டு பலவிதமாக சுற்றிக்கொண்டிருக்கிற இந்த என்னுடைய மனம் என்கிற திருடனை எப்படி நான் பொறுத்துக் கொள்வேன்? அவனை உன்னுடைய அதீனமாக்கிக் கொண்டு நிரபராதியான என்னிடத்தில் கருணை செய்வீராக.

करोमि त्वत्पूजां सपदि सुखदो मे भव विभो
विधित्वं विष्णुत्वं दिशसि खलु तस्याः फलमिति ।
पुनश्च त्वां द्रष्टुं दिवि भुवि वहन् पक्षिमृगता-
मदृष्ट्वा तत्खेदं कथमिह सहे शंकरविभो ॥ २३
च

கரோமி த்வத்பூஜாம் ஸபதி ஸுகதோ மே பவ விபோ
விதித்வம் விஷ்ணுத்வம் திஶஸி கலு தஸ்யா: பலமிதி ।
புனஶ்ச த்வாம் த்ரஷ்டும் திவி புவி வஹன் பக்ஷிம்ருகதாம்
அத்ருஷ்ட்வா தத்கேதம் கதமிஹஸஹே சங்கர விபோ ॥

ஹே ஶங்கர விபோ! உன்னுடைய பூஜையைச் செய்கிறேன். எனக்கு ஸுகத்தையளிப்பவனாக இருப்பதுடன் அந்த பூஜைக்குப் பலனாக பிரம்மா, விஷ்ணு

இவர்களின் பதவியைக் கொடுக்கின்ருய் அல்லவா? அப்பதவிகள் கிடைத்தால் உன்னுடைய தலையையும் பாதங்களையும் காண முறையே பக்ஷியாகவும் மிருகமாகவும் மறுபடியும் உருவமெடுத்து உன்னைக் காணுமல் அந்த துக்கத்தை எவ்விதம் ஸஹிப்பேன்?

कदा वा कैलासे कनकमणिसौधे सह गणै-
र्वसन् शंभोरग्रे स्फुटघटितमूर्धाञ्जलिपुटः ।
विभो साम्ब स्वामिन् परमशिव पाहीति निगद-
न्विधातॄणां कल्पान् क्षणमिव विनेष्यामि सुखतः ॥

கதாவா கைலாஸே கனகமணிஸௌதே ஸஹகணைர்
வஸஞ்சம்போரக்ரே ஸ்புடகடித மூர்த்தாஞ்ஜலி புட: ।
விபோ ஸாம்ப ஸ்வாமின் பரமஶிவ பாஹீதி நிகதன்
விதாத்ரூணும் கல்பான்க்ஷணமிவவிநேஷ்யாமி ஸுகத:

ஹே விபோ! அம்பிகையுடன் கூடிய ஸ்வாமி !! பரமசிவ !!! கைலாஸத்தில் தங்கத்திலுைம் இரத்தினங்களாலும் இழைக்கப்பட்ட மேடையில் சம்புவினுடைய முன்னிலையில் சிவகணங்களுடன் கூட தலைக்குமேல் கூப்பப்பட்ட அஞ்சலி ஹஸ்தனுகவிருக்கின்ற நான் உன்னை ரக்ஷிப்பாய் என்று சொல்லிக் கொண்டு பிரம்மாக்களுடைய கல்பங்களை சுகமாக ஒரு க்ஷணத்தைப்போல் எப்பொழுதுதான் கழிப்பேனே?

स्तवैर्ब्रह्मादीनां जयजयवचोभिर्नियमिनां
गणानां केलीभिर्मदकलमहोक्षस्य ककुदि ।
स्थितं नीलग्रीवं त्रिणयनमुमाश्लिष्टवपुषं
कदा त्वां पश्येयं करधृतमृगं खण्डपरशुम् ॥ २५

ஸ்தவைர் ப்ரஹ்மாதீனும் ஜய ஜய வசோபிர் நியமினும்
கணநாம் கேலீபிர்மதகல மஹோக்ஷஸ்ய ககுதி ।
ஸ்திதம் நீலக்ரீவம் த்ரிணயன முமாச்லிஷ்ட வபுஷம்
கதா த்வாம் பச்யேயம் கரத்ருத ம்ருகம் கண்ட பரசும் ॥

பிரம்மாதிதேவர்கள் ஸ்துதி பாடவும், ரிஷிகள் ஜய ஜய என்று வாழ்த்தொலி கூறவும், சிவகணங்கள் ஆடிப் பாடவும், அழகிய பெரிய காளையின் மேல் வீற்றிருக் கின்ற நிலையிலே நீலகண்டனுகவும், மூன்று கண்களோடு கூடினவனுகவும், பார்வதிதேவியினுல் தழுவிக்கொள்ளப் பட்ட சரீரத்தையுடையவனுகவும், மான், மழு இவைகளை ஏந்திய கைகளையுடையவனுகவும் ஆன உன்னை நான் எப்பொழுது பார்ப்பேன் ?

कदा वा त्वां दृष्ट्वा गिरिश तव भव्याङ्घ्रियुगलं
गृहीत्वा हस्ताभ्यां शिरसि नयने वक्षसि वहन् ।
समाश्लिष्याघ्राय स्फुटजलजगन्धान् परिमला-
नलभ्यां ब्रह्माद्यैर्मुदमनुभविष्यामि हृदये ॥ २६

கதா வா த்வாம் த்ருஷ்ட்வா கிரிச தவ பவ்யாங்க்ரியுகலம்
க்ருஹீத்வா ஹஸ்தாப்யாம் சிரஸிநயனே வக்ஷஸிவஹன்
ஸமாச்லிஷ்யாக்ராய ஸ்புட ஜலஜகந்தான் பரிமலான்
அலப்யாம் ப்ரம்மாத்யைர்முதமனுபவிஷ்யாமி ஹ்ருதயே

மலையில் வசிக்கும் பெருமானே ! உன்னைக் கண் களால் கண்டு உன்னுடைய இரண்டு பாதங்களையும் என்னுடைய இரு கரங்களாலும் பற்றிக் கொண்டு தலையிலும் கண்களிலும், மார்பிலும் அணைத்துக் கொண்டு, நன்கு அலர்ந்த தாமரை மலர்களின் வாசனை யைக் கொண்ட அந்தபரிமளங்களை முகர்ந்து அனுபவித்து பிரம்மாதி தேவர்களுக்கும் அடையமுடியாத சிவானந்

தத்தை எப்பொழுதுதான் என்னுடைய ஹ்ருதயத்தில் அனுபவிக்கப் போகிறேனே?

करस्थे हेमाद्रौ गिरिश निकटस्थे धनपतौ
गृहस्थे स्वर्भूजामरसुरभिचिन्तामणिगणे ।
शिरस्थे शीतांशौ चरणयुगलस्थेऽखिलशुभे
कमर्थं दास्येहं भवतु भवदर्थं मम मनः ॥ २७

கரஸ்தே ஹேமாத்ரௌ கிரிஶ நிகடஸ்தே தனபதௌ
க்ருஹஸ்தே ஸ்வர்பூஜாமரஸுரபி சிந்தாமணிகணே ।
ஶிரஸ்தே ஶீதாம்ஶௌ சரணயுகளஸ்தே அகிலசுபே
கமர்த்தம் தாஸ்யேஹம் பவது பவதர்த்தம் மம மன: ॥

ஹே மலையில் வஸிக்கும் பிரானே! உன்னுடைய கையிலே ஸ்வர்ணமலை; உன் ஸமீபத்திலே தனபதியான குபேரன், உன்னுடைய வீட்டிலே கல்பகவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி இவைகளின் கூட்டம், தலையிலே குளுமையான அம்சமுள்ள சந்திரன், உன்னுடைய பாதாரவிந்தங்களிலே ஸகல மங்களங்கள், இவைகள் இருக்கும்போது எந்த வஸ்துவை நான் உனக்குத் தரப் போகிறேன். என்னுடைய மனம் உன்பொருட்டு ஆகட்டும். (இறைவனிடத்தில் நாம் செலுத்தக் கூடியது மனம் ஒன்று தான் என்பது கருத்து.)

सारूप्यं तव पूजने शिव महादेवेति संकीर्तने
सामीप्यं शिवभक्तिधुर्यजनतासांगत्यसंभाषणे ।
सालोक्यं च चराचरात्मकतनुध्याने भवानीपते
सायुज्यं मम सिद्धमत्र भवति स्वामिन्कृतार्थोऽस्म्यहं

ஸாரூப்யம் தவ பூஜனேஶிவமஹாதேவேதி ஸங்கீர்த்தநே
ஸாமீப்யம் ஶிவபக்திதுர்யஜனதாஸாங்கத்யஸம்பாஷணே
ஸாலோக்யம் ச சராசராத்மகதனு த்யானே பவானீபதே
ஸாயுஜ்யம்மமவித்தமத்ரபவதிஸ்வாமின்க்ருதார்த்தோஸ்ம்யஹம்

ஹே பவானீ பதியான பரமேஶ்வரனே! ஸாரூப்ய மோக்ஷம் உன்னுடைய பூஜையிலும், உன்னுடைய நாம ஸங்கீர்த்தனத்தில் ஸாமீப்ய மோக்ஷமும், சிவபக்தி நிரம்பின பக்தர்களுடன் சேர்க்கையிலும், அவர்களுடன் சம்பாஷிப்பதிலும் ஸாலோக்ய மோக்ஷமும், சராசராத்மகமான உன்னுடைய திருமேனி தியானத்தில் ஸாயுஜ்ய முக்தியும் எனக்கு சித்தியாகிறது. ஸ்வாமி! ஆகையினால் இந்த ஜன்மாவிலேயே ஜன்மமெடுத்ததன் பயனை அடைந்தவனாக ஆகிறேன்.

त्वत्पादाम्बुजमर्चयामि परमं त्वां चिन्तयाम्यन्वहम्
त्वामीशं शरणं व्रजामि वचसा त्वामेव याचे विभो ।
वीक्षां मे दिश चाक्षुषीं सकरुणां दिव्यैश्चिरं प्रार्थितां
शंभो लोकगुरो मदीयमनसः सौख्योपदेशं कुरु ॥

த்வத்பாதாம்புஜமர்ச்சயாமிபரமம்த்வாம் சிந்தயாம்யன்வஹம்
த்வாமீஶம் ஶரணம் வ்ரஜாமிவசஸா த்வாமேவ யாசேவிபோ
வீக்ஷாம்மேதிஶசாக்ஷுஷீம்ஸகருணாம் திவ்யைஶ்சிரம்ப்ரார்த்திதாம்
ஶம்போ லோககுரோ மதீயமநஸ: ஸௌக்யோபதேஶம் குரு ||

ஸர்வவியாபியே! சம்போ!! லோக குருவே!! மேலான உன்னுடைய தாமரைப் பாதங்களைப் பூஜை செய்கின்றேன். பிரதிதினமும் உன்னை மனதினால் சிந்திக்கின்றேன். ஈஶனான உன்னை அடைக்கலம் புகுகிறேன். வாக்கினால் உன்னையே யாசிக்கிறேன். தேவர்களால் பல

காலமாகப் பிரார்த்திக்கப்பட்டதான கருணேயோடு கூடிய கடாக்ஷ வீக்ஷண்யத்தை எனக்கு அருள்வாய். என்னுடைய மனதிற்கு—நித்திய சுகத்திற்கு—ஹேதுவான உபதேசத்தைச் செய்தருள்வாய்.

वस्त्रोद्धूतविधौ सहस्रकरता पुष्पार्चने विष्णुता
गन्धे गन्धवहात्मतान्नपचने बर्हिर्मुखाध्यक्षता ।
पात्रे काञ्चनगर्भतास्ति मयि चेद्बालेन्दु चूडामणे
शुश्रूषां करवाणि ते पशुपते स्वामिंस्त्रिलोकीगुरो ॥

வஸ்த்ரோத்தூதவிதௌஸஹஸ்ரகரதாபுஷ்பார்ச்சனேவிஷ்ணுதா
கந்தே கந்த வஹாத்மதான்ன பசனே பர்ஹிர் முகாத்யக்ஷதா |
பாத்ரே காஞ்சன கர்பதாஸ்திமயிசேத்பாலேந்துசூடாமணே
ஶுஶ்ரூஷாம் கரவாணி தே பஶுபதேஸ்வாமின் த்ரிலோகீகுரோ

பாலசந்திரனே ஆபரணமாகத் தலையிலணிந்துகொண்டிருப்பவனே! பஶுபதே!! ஸ்வாமீ!! மூன்று உலகங்களுக்கும் குருவே!! உனக்கு வஸ்த்ரம் உடுத்தி உபசரிக்க வேண்டுமானல் ஆயிரங் கிரணங்கள் உடைய சூரியனை இருக்கும் தன்மையும், புஷ்பார்ச்சனை செய்யும் விஷயத்தில் மஹாவிஷ்ணுவின் தன்மையும், சந்தனம் அளிக்கும் விஷயத்தில் வாயுபகவானுடைய தன்மையும், அன்னம் முதலியவைகளைப் பக்வம் செய்யும் விஷயத்தில் அக்னிமுகனை தேவேந்திரனுடைய தன்மையும், தேவையான பாத்திரங்களைத் தயார்செய்யும் விஷயத்தில் ஹிரண்ய கர்ப்பனை பிரம்மதேவனுடைய தன்மையும் என்னிடம் இருக்குமேயானல் நான் உனக்கு ஸேவை செய்வேன். (ஸர்வ வியாபியான பரம்பொருளுக்குப் பூஜை செய்ய சாமான்ய ஜீவனல் இயலாது. சூரியன், விஷ்ணு முதலியவர்களின் தன்மையை அடைந்தால் மட்டுமே இயலும் என்பது கருத்து).

नालं वा परमोपकारकमिदं त्वेकं पशूनां पते
पश्यन्कुक्षिगतांश्चराचरगणान्बाह्यस्थितान्रक्षितुम् ।
सर्वामर्त्यपलायनौषधमतिज्वालाकरं भीकरं
निक्षिप्तं गरलं गले न गिलितं नोद्गीर्णमेव त्वया ॥

நாலம் வா பரமோபகாரகமிதம் த்வேகம் பசூனும்பதே
பச்யன்குக்ஷிகதாம்ச்சராசரகணுன்பாஹ்யஸ்திதான்ரக்ஷிதும்
ஸர்வாமர்த்யபலாயநௌஷத மதிஜ்வாலாகரம் பீகரம்
நிக்ஷிப்தம் கரலம் கலேன கிலிதம் நோத்கீர்ண மேவத்வயா ॥

பசுக்களாகிய ஜீவன்களுக்குப் பதியே! நீ செய்த ஒரே ஒரு பரமோபகாரம் போதாதா? உன்னுடைய குக்ஷியிலே தங்கியிருக்கிற சராசரக் கூட்டங்களையும், வெளியிலிருக்கிறவைகளையும் காப்பாற்றுவதற்காக நீ ஜ்வாலையுடன் கூடியதும், பயங்கரமானதும், ஸகல தேவர்களையும் தங்கள் பிராணனைக் காத்துக்கொள்வதற்காக ஓடச்செய்ததுமான ஆலாஹல விஷத்தைக் கண்டத்தில் வைத்துக்கொண்டாய். அது உன்னுல் வெளியில் விடப்படவுமில்லை. கழுத்துக்குக் கீழே விழுங்கப்படவுமில்லை. (இறைவனது பெருங்கருணையை அறிய இச் செயல் ஒன்றே போதும் என்பது தாத்பர்யம்).

ज्वालोग्रः सकलामरातिभयदः क्ष्वेलः कथं वा त्वया
दृष्टः किं च करे धृतः करतले किं पक्वजम्बूफलम् ।
जिह्वायां निहितश्च सिद्धघुटिका वा कण्ठदेशे भृतः
किं ते नीलमणिर्विभूषणमयं शंभो महात्मन्वद ॥

ஜ்வாலோக்ர: ஸகலாமராதிபயத: க்ஷ்வேல: கதம்வாத்வயா
த்ருஷ்ட: கிம்சகரே த்ருத: கரதலே கிம்பக்வ ஜம்பூபலம்

ஜிஹ்வாயாம் நிஹிதஶ்ச ஸித்தகுடிகாவா கண்டதேஶே ப்ருத:
கிம்தே நீலமணிர்விபூஷணமயம் ஶம்போ மஹாத்மன்வத

ஹே சம்போ! ஜ்வாலையுடன் கூடியதும், ஸகல தேவர்களுக்கும் பயத்தை உண்டுபண்ணியதுமான கொடிய விஷம் உன்னால் எப்படிப் பார்க்கப்பட்டது? கையினால் எங்ஙனம் தரிக்கப்பட்டது? அது உன்னுடைய உள்ளங்கையில் பழுத்த நாவற்பழமாக இருந்ததா? அல்லது உனது நாக்கிலே சித்தர்கள் வியாதிகளுக்கு உபயோகிக்கும் குளிகையாக இருந்ததா? அல்லது கழுத்தில் தரிக்கப்பட்டதே அது உனக்கு ஒரு நீல மணி ஆபரணமாக அமைந்ததா? ஓ மஹாத்மாவே! எனக்குச் சொல். (ஆலாஹல பானம் இறைவன் மிகக் கஷ்டப் பட்டு செய்த காரியம் அல்ல. தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட உயிர்க் கூட்டங்களின் நன்மைக்காக, விளையாட்டாகச் செய்த காரியம் என்றபடி).

नालं वा सकृदेव देव भवतः सेवा नतिर्वा नुतिः
पूजा वा स्मरणं कथाश्रवणमप्यालोकनं मादृशाम् ।
स्वामिन्नस्थिरदेवतानुचरणायासेन किं लभ्यते
का वा मुक्तिरितः कुतो भवति चेत्किं प्रार्थनीयं सदा ॥

நாலம் வா ஸக்ருதேவ தேவபவத: ஸேவா நதிர்வாநுதி:
பூஜாவாஸ்மரணம்கதாச்ரவணமப்யாலோகனம்மாத்ருஶாம்
ஸ்வாமின்னஸ்திர தேவதானுசரணாயாஸேன கிம்லப்யதே
கா வா முக்திரித: குதோ பவதி சேத்கிம் ப்ரார்த்தநீயம் ஸதா

ஹே ஸ்வாமி! தேவா!! என் போன்றவர்கள் உன் பொருட்டு நமஸ்காரமோ, தோத்திரமோ, பூஜையோ, தியானமோ, உன்னுடைய கதைகளைக் கேட்பதுவோ அல்லது உன்னுடைய மூர்த்தியைத் தர்சனம் செய்வதோ ஒரு முறையாவது செய்தால் போதாதா? இப்படி இல்லை

யென்ருல் மோக்ஷம் எங்ஙனம் கிட்டும்? இப்படி இவை களில் ஏதாவது ஒன்றினல் மட்டுமே மோக்ஷம் கிடைக்கு மாஞல் ஸ்திரமற்ற தேவதைகளை மிக்க சிரமத்துடன் வழிபடுவதால் என்ன பிரயோஜனம் அடைய முடியும்? அவைகளைப் பிரார்த்திக்க வேண்டியது எதற்காக? (அவைகளைப் பிரார்த்திக்க வேண்டியதில்லை என்பது கருத்து).

किं ब्रूमस्तव साहसं पशुपते कस्यास्ति शंभो भव-
द्धैर्यं चेदृशमात्मनः स्थितिरियं चान्यैः कथं लभ्यते ।
भ्रश्यद्देवगणं त्रसन्मुनिगणं नश्यत्प्रपञ्चं लयं
पश्यन्निर्भय एक एव विहरत्यानन्दसान्द्रो भवान् ॥

கிம் ப்ரூமஸ்தவ ஸாஹஸம்பஶுபதேகஸ்யாஸ்திஶம்போபவத்
தைர்யம்சேத்ருஶமாத்மன:ஸ்திதிரியம்சான்யை:கதம் லப்யதே
ப்ரஶ்யத்தேவகணம்த்ரஸன்முனிகணம்நஶ்யத்ப்ரபஞ்சம்லயம்
பஶ்யந்நிர்பய ஏக ஏவவிஹரத்யானந்தஸாந்த்ரோபவான்

ஹே சம்போ! பசுபதே!! உன்னுடைய ஸாஹஸத்தை என்னவென்று சொல்வோம்? இம்மாதிரி தைரியம் யாருக்கு இருக்கிறது? உன்னுடைய நிலையை மற்றவர்களால் எங்ஙனம் அடைய முடியும்? தங்களுடைய ஸ்தானங்களில் இருந்து விழுகிற தேவர்களின் கூட்டங்களையும், பயத்துடன் கூடிய முனிவர்களின் கூட்டங்களையும், நசிக்கின்ற பிரபஞ்சத்தையும் உடையதாகிய பிரளய காலத்தைப் பார்த்துக்கொண்டு நிர்ப்பயமாக நீ ஒருவனுகவே ஆனந்தத்துடன் கூடினவனுக விளையாடுகிருய்.

योगक्षेमधुरंधरस्य सकलश्रेयःप्रदोद्योगिनो
दृष्टादृष्टमतोपदेशकृतिनो बाह्यान्तरव्यापिनः ।

सर्वज्ञस्य दयाकरस्य भवतः किं वेदितव्यं मया
शंभो त्वं परमान्तरङ्ग इति मे चित्ते स्मराम्यन्वहम् ॥

யோகக்ஷேமதுரந்தரஸ்யஸகலச்ரேய:ப்ரதோத்யோகினே
த்ருஷ்டாத்ருஷ்டமதோபதேசக்ருதினேபாஹ்யாந்தரவ்யாபிந:
ஸர்வக்ஞஸ்ய தயாகரஸ்ய பவத: கிம்வேதிதவ்யம் மயா
ஶம்போ த்வம் பரமாந்தரங்க இதிமேசித்தேஸ்மராம்யன்வஹம்

சம்புவே ! நீ எல்லா ஜீவன்களுடையவுமான யோக க்ஷேமத்தைச் சுமக்கின்றாய். ஸகல விதமான நன்மைகளையும் கொடுக்க முற்படுகிறாய். கண்ணுக்குத் தெரிந்தவை, தெரியாதவைகளுமானவற்றை அடைய மார்க்கத்தை உபதேசிக்கின்றாய். உள்ளும் புறமும் வியாபித்து இருக்கின்றாய். நீ ஸகலமுமறிந்தவன். கருணைக்கு இருப்பிடம். உனக்குத் தெரியப்படுத்த வேண்டுவது என்றால் என்ன இருக்கிறது? நீ எனக்குப் பரம அந்தரங்கமானவன் என்பதை மட்டும் என்னுடைய மனதில் ஸதா ஸ்மரித்துக்கொண்டிருக்கிறேன்.

भक्तो भक्तिगुणावृते मुदमृतापूर्णे प्रसन्ने मनः
कुम्भे साम्ब तवाङ्घ्रिपल्लवयुगं संस्थाप्य संवित्फलं
सत्त्वं मन्त्रमुदीरयन्निजशरीरागारशुद्धिं वह-
न्पुण्याहं प्रकटीकरोमि रुचिरं कल्याणमापादयन् ॥

பக்தோ பக்திகுணாவ்ருதே முதம்ருதாபூர்ணே ப்ரஸன்னே மன:
கும்பே ஸாம்பதவாங்க்ரி பல்லவயுகம் ஸம்ஸ்தாப்ய ஸம்வித்பலம்
ஸத்வம் மந்த்ரமுதீரயன் நிஜசரீராகார சுத்திம்வஹன்
புண்யாஹம் ப்ரகடீகரோமி ருசிரம்கல்யாணமாபாதயன்

ஹே ஸாம்ப ! பக்தனாகிய நான் பக்தி என்னும் நூலினால் சுற்றப்பட்ட என்னுடைய மனம் என்னும் குடத்தில்

ஆனந்தம் என்னும் ஜலத்தை நிரப்பி, உன்னுடைய இரண்டு பாதங்கள் என்னும் மாந்தளிர்களை அதில் வைத்து, அதன் மேல் ஞானமென்னும் தேங்காயை வைத்து, ஸத்வ குணத்தை வளர்க்கின்ற நல்ல மந்திரங்களை உச்சரித்து, என்னுடைய சரீரத்தைச் சுத்திசெய்து கொள்ளவும், எனக்கு மங்களம் உண்டாவதற்கும் புண்யாஹம் என்ற கர்மாவைச் செய்கிறேன்.

आम्नायाम्बुधिमादरेण सुमनःसंघाः समुद्यन्मनो
मन्थानं दृढभक्तिरज्जुसहितं कृत्वा मथित्वा ततः ।
सोमं कल्पतरुं सुपर्वसुरभिं चिन्तामणिं धीमतां
नित्यानन्दसुधां निरन्तररमासौभाग्यमातन्वते ॥३७

ஆம்னாயாம்புதிமாதரேண ஸுமன: ஸங்கா: ஸமுத்யன்மனோ
மந்தானம் த்ருடபக்திரஜ்ஜுஸஹிதம் க்ருத்வா மதித்வாதத:
ஸோமம் கல்பதரும் ஸுபர்வசுரபிம் சிந்தாமணிம் தீமதாம்
நித்யானந்தஸுதாம் நிரந்தரரமாஸௌபாக்யமாதன்வதே

நிச்சயமான புத்தியை த்ருடமான பக்தி என்னும் கயிற்றுடன் கூடிய மத்தாகக்கொண்டு நல்ல மனமுடையவர்கள் வேதமாகிய சமுத்திரத்தைக் கடைகிறார்கள். அதிலிருந்து சோமன் (சந்திரன்), கல்பகவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி, நித்யானந்த மென்னும் அம்ருதம், நிரந்தர சுகம் என்னும் மோக்ஷம் ஆகிய எல்லாமாகவும் விளங்கும் ஸ்ரீ பரமேச்வரனை அடைகிறார்கள்.

प्राक्पुण्याचलमार्गदर्शितसुधामूर्तिः प्रसन्नः शिवः
सोमः सद्गणसेवितो मृगधरः पूर्णस्तमोमोचकः ।

चेतः पुष्करलक्षितो भवति चेदानन्दपाथोनिधिः
प्रागल्भ्येन विजृम्भते सुमनसां वृत्तिस्तदा जायते ॥

ப்ராக்புண்யாசல மார்கதர்ஶிதஸுதாமூர்த்தி: ப்ரஸன்ன:சிவ:
ஸோம: ஸத்கணஸேவிதோ ம்ருகதர:பூர்ணஸ்தமோ மோசக:
சேத: புஷ்கரலக்ஷிதோ பவதி சேதானந்தபாதோநிதி:
ப்ராகல்ப்யேனவிஜ்ரும்பதேஸுமனஸாம்வ்ருத்திஸ்ததாஜாயதே

(சிவோதயம் ஒரு சந்த்ரோதயமாகக் கூறப்பட்டு உளது இந்த ஶ்லோகத்தில்)

சந்திரோதயமாகப்பொருள்:- பிரஸன்னமான, மங்களகரமான பூரணசந்திரன் நக்ஷத்திரக் கூட்டங்களுடன் ஒரு மிருகத்தின் உருவத்தை அங்கமாகக் கொண்டவனாக கிழக்குத்திக்கிலேயிருக்கிற உதயகிரியின் மார்க்கமாகத்தோன்றி இருளைப் போக்கடிப்பவனாக ஆகாயத்தில் காணப்பட்டால் அப்பொழுது ஆனந்தமயமான சமுத்ரம் பொங்குகிறது. அப்பொழுது நல்ல மனமுடையவர்களின் மனவிருத்தியிலே மாறுதல் உண்டாகிறது. அதாவது சந்த்ரோதயம் இருளைப் போக்குவது மட்டுமின்றி மனதிற்கு ஆனந்தத்தையும் உண்டு பண்ணுகிறது.

சிவோதயமாகப்பொருள்:- சாந்தமூர்த்தியும் மங்களகரனுமான சிவன், கையிலே மான் தாங்கி அம்ருத ஸ்வரூபனாக, நல்ல தேவதா கணங்களுடன் சூழப்பட்டவனாக, அஞ்ஞான மென்னும் இருளைப் போக்குபவனாக முன் செய்த மலைபோன்ற புண்யங்களின் காரணத்தால் மனமென்னும் ஆகாயத்தில் தோன்றினால் அப்பொழுது ஆனந்தம் என்ற கடல் பொங்குகிறது. நல்லவர்களுடைய மனத்தில் ஒரு மாறுதல் உண்டாகிறது.

धर्मो मे चतुरङ्घ्रिकः सुचरितः पापं विनाशं गतं
कामक्रोधमदादयो विगलिताः कालाः सुखाविष्कृताः
ज्ञानानन्दमहौषधिः सुफलिता कैवल्यनाथे सदा
मान्ये मानसपुण्डरीकनगरे राजावतंसे स्थिते ॥३९

தர்மோ மே சதுரங்க்ரிக: ஸுசரித: பாபம் விநாஶம் கதம்
காமக்ரோத மதாதயோ விகலிதா: காலா: ஸுகாவிஷ்க்ருதா:
ஞானனந்த மஹௌஷதி: ஸுபலிதா கைவல்யநாதே ஸதா
மான்யே மானஸ புண்டரீகநகரே ராஜாவதம்ஸேஸ்திதே

சந்த்ரனைத் தலையிலே அணிந்த பூஜிக்கத்தகுந்த பரமசிவன் என்னுடைய ஹிருதய கமலமாகிய நகரிலே நிலைபெற்று இருக்கும் பொழுது நான்கு பாதங்களை உடைய தர்மம் நன்கு அனுஷ்டிக்கப்படுகிறது. பாபம் நசித்துப் போகிறது. காமம், க்ரோதம், மதம் முதலியவைகள் என்னை விட்டு அகலுகின்றன. காலம் சுகத்தையே வெளிப்படுத்துகிறது. ஞானம், ஆனந்தம் என்ற ஓஷதிகள் நன்கு பலனைக் கொடுக்கின்றன.

धीयन्त्रेण वचोघटेन कविताकुल्योपकुल्याक्रमै-
रानीतैश्च सदाशिवस्य चरिताम्भोराशिदिव्यामृतैः ।
हृत्केदारयुताश्च भक्तिकलमाः साफल्यमातन्वते
दुर्भिक्षान्मम सेवकस्य भगवन्विश्वेश भीतिः कुतः ॥

தீயந்த்ரேண வசோகடேன கவிதாகுல்யோபகுல்யாக்ரமை:
ஆனீதைஶ்சஸதாஶிவஸ்யசரிதாம்போராஶிதிவ்யாம்ருதை:
ஹ்ருத்கேதாரயுதாஶ்ச பக்திகலமா: ஸாபல்ய மாதன்வதே
துர்பிக்ஷான்மம ஸேவகஸ்ய பகவன் விஶ்வேஶ பீதி: குத:

இவ்வுலகமனைத்துக்கும் ஈஶனை பகவானே ! புத்தி என்னும் இயந்திரத்தினுல் வார்த்தையாகிற பாத்திரத்தைக் கொண்டு, கவிதையென்னும் வாய்க்கால்கள், சிறுவாய்க்கால்கள் வழியாகக் கொண்டுவரப்பட்டுப் பாய்ச்சப்படுகிற ஸதாஶிவனுடைய சரித்திரம் என்னும் சமுத்திரத்தின் திவ்ய ஜலத்தினுல் மனமென்னும் விளைநிலத்திலே பக்தியென்னும் பயிர் மிகவும் நன்ருகப் பலனைக் கொடுக்கிறது. ஆகவே உனது ஸேவகனுன எனக்கு துர்பிக்ஷத்தினுல் பயம் ஏது? (இல்லைஎன்பது கருத்து)

पापोत्पातविमोचनाय रुचिरैश्वर्याय मृत्युंजय
स्तोत्रध्याननतिप्रदक्षिणसपर्यालोकनाकर्णने ।
जिह्वाचित्तशिरोङ्घ्रिहस्तनयनश्रोत्रैरहं प्रार्थितो
मामाज्ञापय तन्निरूपय मुहुर्मामेव मा मेऽवचः ॥ ४१

பாபோத்பாதவிமோசனுய ருசிரைஶ்வர்யாய ம்ருத்யுஞ்ஜய
ஸ்தோத்ர த்யான நதிப்ரதக்ஷிண ஸபர்யாலோகனுகர்ணனே
ஜிஹ்வாசித்தஶிரோங்க்ரிஹஸ்தநயனஸ்ரோத்ரைஹம்ப்ரார்திதோ
மாமாக்ஞாபய தந்நிருபய முஹுர்மாமேவ மாமேவச: ॥

ஹே ம்ருத்யுஞ்ஜய ! பாபங்களினுல் ஏற்படும் உபத்ரவங்களைப் போக்கடித்துக்கொள்ளவும், மேலான ஐஶ்வர்யமாகிய பிரம்மானந்தத்தை அடைவதற்காகவும் ஸ்துதி, தியானம், நமஸ்காரம், பிரதக்ஷிணம், பூஜை, தரிசனம், கதாஶ்ரவணம் ஆகிய விஷயங்களில் முறையே நாக்கு, மனம், தலை, கால்கள், கைகள், கண்கள், காதுகள் இவைகளினுல் ஈடுபடுத்தப்பட்டவனுக இருக்கிறேன். நல்வழியை எனக்கு மீண்டும் மீண்டும் உபதேசித்து ஆக்ஞாபனம் செய். தக்ஷிணமூர்த்தியாக

இருந்து அனுஷ்டித்த மௌனம் என் விஷயத்தில் வேண்டாம். (வாயைத் திறந்து உபதேசம் செய்க என்று வேண்டப்படுகிறது.)

गाम्भीर्यं परिखापदं घनधृतिः प्राकार उद्यद्गुण-
स्तोमश्चाप्तबलं घनेन्द्रियचयो द्वाराणि देहे स्थितः ।
विद्या वस्तुसमृद्धिरित्यखिलसामग्रीसमेते सदा
दुर्गातिप्रियदेव मामकमनोदुर्गे निवासं कुरु ॥ ४२

காம்பீர்யம் பரிகாபதம் கனத்ருதி: ப்ராகாரஉத்யத்குண
ஸ்தோமஶ்சாப்தபலம்கனேந்த்ரியசயோத்வாராணிதேஹேஸ்தித:
வித்யாவஸ்து ஸம்ருத்திரித்யகிலஸாமக்ரீ ஸமேதேஸதா
துர்காதிப்ரிய தேவ மாமக மனோதுர்க்கே நிவாஸம் குரு

பர்வதத்தில் வசிக்கப்பிரியமுள்ளவனே! (துர்க்கையிடத்தில் பிரியமுள்ளவனே!) பிரகாசமான ரூபமுடையவனே! என்னுடைய மனம் ஒரு கோட்டை. அந்தக் கோட்டைக்கு காம்பீர்யமே அகழ். தைரியமே பிராகாரங்கள். மனதில் உண்டாகும் குணங்களின் கூட்டமே ஆப்தமான பலம், தேகத்தில் ஸ்திரமாக இருக்கின்ற இந்திரியங்களின் கூட்டமே வாயில்கள். வித்தை என்னும் வஸ்து அதிகமாய் இருக்கிறது. இப்படி ஒரு கோட்டைக்குத் தேவையான எல்லா ஸாமான்களும் கூடினதான இந்த மனமென்னும் கோட்டையிலே எப்பொழுதும் வஸிப்பாயாக.

मा गच्छ त्वमितस्ततो गिरिश भो मय्येव वासं कुरु
स्वामिन्नादिकिरात मामकमनः कान्तारसीमान्तरे ।
वर्तन्ते बहुशो मृगा मदजुषो मात्सर्यमोहादय-
स्तान्हत्वा मृगयाविनोदरुचितालाभं च संप्राप्स्यसि ॥ ४३

மா கச்ச த்வமிதஸ்நதோ கிரிஶ போ மய்யேவ வாஸம்குரு
ஸ்வாமின்ஞதிகிராத மாமகமன: காந்தார ஸீமாந்தரே ।
வர்த்தந்தேபஹுஶோம்ருகாமதஜுஷோமாத்ஸர்யமோஹாதய:
தான் ஹத்வா ம்ருகயாவிநோதருசிதாலாபம் ச ஸம்ப்ராப்ஸ்யஸி

ஹே ஸர்வேஶ்வரா ! ஆதி கிராதனே ! மலையிலே வஸிப்பவனே ! நீ வேட்டையாடுவதற்காக இங்கும் அங்கும் போகவேண்டாம். என்னிடத்திலேயே வஸிப்பாயாக. அன்னியர்களால் பிரவேசிக்கமுடியாத (அறிய முடியாத) என்னுடைய மனமாகிய அடர்ந்த காட்டிலே மிகுந்த மதம் கொண்ட, பொருமை, மோஹம் முதலிய பலவித மிருகங்கள் அலைந்துகொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் இங்கு கொன்று வேட்டையாடுதலில் உனக்குள்ள ஆசையின் பலனை நன்ருகப் பெறுவாயாக.

करलग्नमृगः करीन्द्रभङ्गो
  घनशार्दूलविखण्डनोऽस्तजन्तुः ।
गिरिशो विशदाकृतिश्च चेतः
  कुहरे पञ्चमुखोऽस्ति मे कुतो भीः ॥ ४४

கரலக்னம்ருக: கரீந்த்ரபங்கோ
கனஶார்த்தூலவிகண்டனோஸ்த ஜந்து: ।
கிரிஶோ விஶதாக்ருதிஶ்ச சேத:
குஹரே பஞ்சமுகோஸ்தி மே குதோ பீ: ॥

மானைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவனும், கஜாஸுரனை வதம் செய்தவனும், துஷ்ட வியாக்ராஸுரன் என்ற அசுரனைக் கொன்றவனும், நாசம் செய்யப்பட்ட ஸகல ப்ராணிகளையும் உடையவனும், மலையில் வசிப்பவனும், வெண்ணிற முடையவனுமான, ஐந்து முகங்களை

யுடைய பரமேஶ்வரன் என்ற சிம்மம் என்னுடைய மனக் குகையில் வாஸம் செய்யும்பொழுது எனக்குப் பயம் எங்கிருந்து ஏற்படும்? (மற்ற எவரிடமிருந்தும் பயம் இல்லை என்றபடி.)

छन्दःशाखिशिखान्वितैर्द्विजवरैः संसेविते शाश्वते
सौख्यापादिनि खेदभेदिनि सुधासारैः फलैर्दीपिते ।
चेतः पक्षिशिखामणे त्यज वृथासंचारमन्यैरलं
नित्यं शंकरपादपद्मयुगलीनीडे विहारं कुरु ॥ ४५

சந்த:ஶாகிஶிகான்விதை:த்விஜவரை:ஸம்ஸேவிதே ஶாஶ்வதே
ஸௌக்யாபாதினி கேதபேதினி ஸுதாஸாரை: பலைர்தீபிதே
சேத: பக்ஷிசிகாமணே த்யஜ வ்ருதாஸஞ்சாரமன்யைரலம்
நித்யம் சங்கரபாதபத்மயுகலீ நீடே விஹாரம் குரு ‖

மனமென்னும் சிறந்த பறவையே! நீ வீணாக அலைவதை விட்டுவிடு. அன்யர்களைத் தேடி அலைந்ததுபோதும். சங்கரனின் பாதபத்மங்களாகிய கூட்டில் எப்பொழுதும் தங்கி இருப்பாயாக. அந்த பாதபத்மங்கள் வேதாந்தங்களை நன்கு கற்றுணர்ந்த ப்ராம்மணோத்தமர்களால் ஆஶ்ரயிக்கப்படுவது. அது ஶாஶ்வதமானது. ஸௌக்யத்தை அளிப்பது. சிரமத்தைப் போக்கடிப்பது. அம்ருதப் பிரவாஹத்திற்குச் சமமான பலன்களால் பிரகாசிக்கிறது.

आकीर्णे नखराजि कान्ति विभवैरुद्यत्सुधावैभवै-
राधौतेऽपि च पद्मरागललिते हंसव्रजैराश्रिते ।
नित्यं भक्तिवधूगणैश्च रहसि स्वेच्छाविहारं कुरु
स्थित्वा मानसराजहंस गिरिजानाथाङ्घ्रिसौधान्तरे ॥ ४६

ஆகீர்ணே நகராஜிகாந்திவிபவைருத்யத்ஸுதாவைபவை
ராதௌதேபி ச பத்மராகலலிதே ஹம்ஸவ்ரஜைராஶ்ரிதே ।
நித்யம் பக்திவதூகணைஶ்ச ரஹஸி ஸ்வேச்சா விஹாரம் குரு
ஸ்தித்வாமானஸராஜஹம்ஸகிரிஜாநாதாங்க்ரிஸௌதாந்தரே

மனமென்னும் ராஜஹம்ஸமே! கிரிஜாநாதனுகிய பரமேஶ்வரனின் பாதமாகிய மாளிகையில் ரகஸ்யமாக இருந்துகொண்டு பக்தியாகிய ஸ்த்ரீகளின் கூட்டங்களுடன் உன் இஷ்டப்படி விளையாடுவாயாக. அந்த பாதமாகிய மாளிகை நகங்களின் ஒளியினுல் பிரகாசப் படுத்தப்பட்டது. சந்திரனுடைய கிரணங்களினுல் வெள்ளையடிக்கப்பட்டது. பத்மராக சிவப்புக் கற்களால் அழகு படுத்தப்பட்டது. ஸன்யாஸிகளாகிய அன்னப் பக்ஷிகளின் கூட்டத்தால் ஸேவிக்கப்பட்டது. (பரமேஶ்வரனின் பாதங்களில் மனது ஈடுபட வேண்டுமென்பதும் அப்பொழுது கிடைக்கக்கூடியதே ஆனந்தம் என்பதும் கருத்து).

शंभुध्यानवसन्तसङ्गिनि हृदारामेऽघजीर्णच्छदाः
स्रस्ता भक्तिलताच्छटा विलसिताः पुण्यप्रवालश्रिताः ।
दीप्यन्ते गुणकोरका जपवचःपुष्पाणि सद्वासना
ज्ञानानन्दसुधामरन्दलहरी संवित्फलाभ्युन्नतिः ॥ ४७

சம்புத்யான வஸந்தஸங்கினிஹ்ருதாராமேகஜீர்ணச்சதா:
ஸ்ரஸ்தா பக்திலதாச்சடா விலஸிதா: புண்யப்ரவாலஶ்ரிதா:
தீப்யந்தே குணகோரகா ஜபவச: புஷ்பாணி ஸத்வாஸனு:
ஞானுனந்த ஸுதாமரந்தலஹரீஸம்வித்பலாப்யுன்னதி:

சம்புத்யானமென்னும் வஸந்த ருதுவில், மனமென்னும் தோட்டத்தில், பாபங்களாகிய பழைய இலைகள் உதிர்ந்து புண்யங்களாகிய இளந்தளிர்களால் பிரகாசிக்

கின்ற பக்தியென்னும் கொடிகளின் கூட்டமும், நற்குணங்களாகிய மொட்டுகளும், ஜப வார்த்தைகளாகிய புஷ்பங்களும், ஸத்வாஸனையும், ஞானம், ஆனந்தம் என்ற புஷ்பங்களின் அம்ருத ரஸப்பிரவாஹமும், ஆத்மக்ஞானமாகிய பழங்களும் நிரம்பி பிரகாசிக்கின்றன.

नित्यानन्दरसालयं सुरमुनिस्वान्ताम्बुजाताश्रयं
स्वच्छं सद्विजसेवितं कलुषहृत्सद्वासनाविष्कृतम्।
शंभुध्यानसरोवरं व्रज मनोहंसावतंस स्थिरं
किं क्षुद्राश्रयपल्वलभ्रमणसंजातश्रमं प्राप्स्यसि ॥ ४८

நித்யானந்தரஸாலயம்ஸுரமுனிஸ்வாந்தாம்புஜாதாச்ரயம்
ஸ்வச்சம் ஸத்விஜஸேவிதம்கலுஷஹ்ருத்ஸத்வாஸனுவிஷ்க்ருதம்
சம்புத்யான ஸரோவரம் வ்ரஜமனோஹம்ஸாவதம்ஸஸ்திரம்
கிம்க்ஷுத்ராஸ்ரய பல்வலப்ரமணஸஞ்ஜாதஸ்ரமம் ப்ராப்ஸ்யஸி

ஹே மனமாகிய சிறந்த அன்னப்பக்ஷியே, தாழ்ந்தவர்களுக்குச் சேவை செய்தலாகிய சேற்றுக் குட்டைகளில் உழன்று ஏன் வீண் சிரமம் அடைகிறுய். ஸுகத்திற்கு உற்பத்தி ஸ்தானமாகிய பரமேச்வரனது த்யானமாகிய தடாகத்தை அடைவாய். அது நித்யானந்தமாகிய அம்ருதத்திற்கு இருப்பிடம். தேவர்கள், முனிவர்கள் ஆகியவர்களுடைய மனமென்னும் புஷ்பத்திற்கு ஆஸ்ரயமான இடம். நிர்மலமானது. சிறந்த பிராம்மணர்களால் ஸேவிக்கப்படுவது. பாபங்களாகிய அழுக்கைப் போக்கடித்து சுத்தமாக்கக்கூடியது. நல்ல வாஸனைகளை வெளிப்படுத்தக் கூடியது. (சம்பு தியானத்தின் பெருமை இங்கு கூறப்படுகிறது).

आनन्दामृतपूरिता हरपदाम्भोजालवालोद्यता
स्थैर्योपघ्नमुपेत्य भक्तिलतिका शाखोपशाखान्विता ।

उच्चैर्मानसकायमानपटलीमाक्रम्य निष्कल्मषा
नित्याभीष्टफलप्रदा भवतु मे सत्कर्मसंवर्धिता ॥ ४९

ஆனந்தாம்ருதபூரிதா ஹரபதாம் போஜால வாலோத்யதா
ஸ்தைர்யோபக்னமுபேத்ய பக்திலதிகா ஶாகோபஶாகான்விதா
உச்சைர் மானஸகாயமான படலீமாக்ரம்யநிஷ்கல்மஷா
நித்யாபீஷ்டபலப்ரதா பவதுமே ஸத்கர்மஸம்வர்திதா ॥

ஆனந்தமென்னும் ஜலத்தினுல் வளர்க்கப்பட்டதும், பரமேஶ்வரனின் திருவடிக்கமலங்கள் என்னும் பிரதேசத்திலிருந்து முளைத்து வளர்ந்ததும், ஸ்திரம் என்னும் ஊன்றுகோலையுடையதும், பெருங்கிளைகள், சிறுகிளைகளையுடையதாயும், சிறந்த மனமாகிய பந்தல்களில் படர்ந்துள்ளதாயும், குற்றமற்றதாயும், ஸத்கர்மாக்களினுல் மேன்மேலும் வளர்ந்து கொண்டிருக்கிறதாயும் இருக்கிற சிவபக்தி என்னும் கொடி எனக்கு நித்யமானதும், நான் எப்பொழுதும் அபேக்ஷிப்பதுமான மோக்ஷம் என்ற பலனைக் கொடுக்கட்டும்.

संध्यारम्भविजृम्भितं श्रुतिशिरःस्थानान्तराधिष्ठितं
सप्रेमभ्रमराभिराममसकृत्सद्वासनाशोभितम् ।
भोगीन्द्राभरणं समस्तसुमनः पूज्यं गुणाविष्कृतम्
सेवे श्रीगिरिमल्लिकार्जुनमहालिङ्गं शिवालिङ्गितम् ॥ ५०

ஸந்த்யாரம்ப விஜ்ரும்பிதம் ஶ்ருதி ஶிர:ஸ்தாஞந்தராதிஷ்டிதம்
ஸப்ரேமப்ரமராபிராமமஸக்ருத் ஸத்வாஸஞ சோபிதம் ।
போகீந்த்ராபரணம் ஸமஸ்தஸுமன: பூஜ்யம் குணவிஷ்க்ருதம்
ஸேவே ஸ்ரீ கிரிமல்லிகார்ஜுந மஹாலிங்கம் சிவாலிங்கிதம் ॥

(ஆந்த்ர தேசத்தில் ஸ்ரீசைல க்ஷேத்திரத்திலுள்ள மஹா லிங்கத்தின் மஹிமை இந்த ஶ்லோகத்திலும்

அடுத்த ஶ்லோகத்திலும் கூறப்படுகிறது. அந்தச் சிவாலயத்தில் பகவத் பாதர்கள் சிவானந்தலஹரீ கிரந்தத்தை அருளியதாக ஐதிஹ்யம்)

(மல்லிகார்ஜுன லிங்கத்துக்கும், மருத மரத்துக்கும் பொதுவான பொருள்).

மருத மரத்துக்கு : ஸந்தியாகாலத்தில் புஷ்பிப்பதும், காதுகள், சிரஸ் இவைகளில் வைக்கப்படுவதும், தேனைப்பருகும் ஆவலுடைய வண்டுகளினால் சூழப்பட்டு அழகுள்ளதாயும், எப்பொழுதும் நல்ல வாஸனையினால் பிரகாசிக்கிறதாயும், ஸுகத்தை விரும்புபவர்களுக்கு அலங்காரமாயும், எல்லாப் புஷ்பங்களிலும் சிறந்ததும், குணங்களால் பிரசித்தியுடையதும், மங்களகரமானதும், அழகு வாய்ந்ததும், மலையில் இருக்கிற மல்லிகைக் கொடியினால் சுற்றப்பட்டு இருக்கிற அர்ஜுனம் என்கிற மருதமரத்தை ஸேவிக்கிறேன்.

மல்லிகார்ஜுன மஹாலிங்கத்துக்குப் பொருள் :—

ஸந்தியா காலத்தின் ஆரம்பத்தில் தாண்டவம் செய்பவனும், வேதாந்தங்களினால் ஸ்தாபிக்கப்பட்டவனும், பிரேமையோடு கூடிய பிரமராம்பிகை என்னும் தேவியினால் அழகுள்ளவனையும், நல்ல மனமுடையவர்களின் தியானத்தில் பிரகாசிக்கின்றவனையும், ஸர்ப்பங்களை ஆபரணங்களாக அணிந்தவனும், ஸகல தேவர்களாலும் பூஜிக்கப் படுபவனும், மேலான ஸத்வ குணத்தை வெளியிடுபவனாகவும், பார்வதி தேவியினால் ஆலிங்கனம் செய்யப்பட்டவனாகவுமிருக்கிற ஸ்ரீ பர்வதத்தில் இருக்கிற மல்லிகார்ஜுன மஹாலிங்கத்தை ஸேவிக்கிறேன்.

भृङ्गीच्छानटनोत्कटः करिमदग्राही स्फुरन्माधवा-
ह्लादो नादयुतो महासितवपुः पञ्चेषुणा चादृतः ।

सत्पक्षः सुमनोवनेषु स पुनः साक्षान्मदीये मनो
राजीवे भ्रमराधिपो विहरतां श्रीशैलवासी विभुः ॥ ५१

ப்ருங்கீச்சா நடனேத்கட: கரிமதக்ராஹீ ஸ்புரன் மாதவா
ஹ்லாதோ நாதயுதோ மஹாஸிதவபு:பஞ்சேஷுணுசாத்ருத:
ஸத்பக்ஷ: ஸுமனோவனேஷுஸபுன: ஸாக்ஷான் மதீயேமனே
ராஜீவே ப்ரமராதிபோ விஹரதாம் ஸ்ரீஶைலவாஸீவிபு: ॥

(பரமேஶ்வரனுக்கும் ஆண் வண்டுக்கும் சிலேஷை.)

ஆண் வண்டாகப் பொருள்:— பெண்வண்டின் இச்சையை அனுசரிப்பதில் பிரியமுள்ளதாயும், யானைகளின் மதநீரைப் பருகுவதாயும், வஸந்த ருதுவில் ஸந்தோஷத்தையுடையதாயும், ரீங்கார ஒலியை உண்டாக்குவதும், கறுத்த சரீரத்தை உடையதும், மன்மதனுக்குத் துணை செய்வதாயும், புஷ்பவனங்களில் காணப்படுவதும், நல்ல இறக்கைகளையுடையதும், கண்களுக்கு முன்னால் காணப்படுவதும், ஸ்ரீ ஶைலம் என்னும் மலையில் இருப்பதும், எங்கும் ஸஞ்சாரம் செய்யும் வல்லமை உள்ளதாயும் உள்ள ஆண் வண்டு (பரமேஶ்வரன்) என்னுடைய மனமாகிய தாமரைப் பூவில் விளையாடட்டும்.

பரமேஶ்வரனாகப் பொருள்:—ப்ருங்கி என்னும் மஹரிஷியின் இச்சையை அனுஸரித்து நடனம் செய்பவனும், கஜாஸுரனுடைய மதத்தை அடக்கினவனும், பிரகாசம் பொருந்திய மஹாவிஷ்ணுவினிடத்தில் பிரியம் உடையவனும், ஓங்கார நாதத்துடன் கூடினவனும், ஜோதிஸ்வரூபமான தேஹத்தை உடையவனும், மன்மதனால் ஆதரவாக அடையப் பட்டவனும், நல்லவர்களைக் காப்பாற்றுபவனும், மற்றும் நம் கண்களுக்கு எதிரில் காணப்படுபவனும், ஸ்ரீ சைலம் என்னும் மலையில் வஸிப்பவனும்

பிரமராம்பிகை என்னும் தேவியின் நாதனுமான ஸ்ரீ பரமேஶ்வரன் என்னுடைய மனத்தாமரையில் விளையாடட்டும்.

कारुण्यामृतवर्षिणं घनविपद्ग्रीष्मच्छिदाकर्मठम्
विद्यासस्यफलोदयाय सुमनःसंसेव्यमिच्छाकृतिम् ।
नृत्यद्भक्तमयूरमद्रिनिलयं चञ्चज्जटामण्डलं
शंभो वाञ्छति नीलकंधर सदा त्वां मे मनश्चातकः ॥ ५२

காருண்யாம்ருதவர்ஷிணம் கனவிபத் க்ரீஷ்மச்சிதா கர்மடம்
வித்யா ஸஸ்யபலோதயாய ஸுமன: ஸம்ஸேவ்ய மிச்சாக்ருதிம் ।
ந்ருத்யத் பக்த மயூர மத்ரி நிலயம் சஞ்சஜ்ஜடாமண்டலம்
சம்போ வாஞ்சதி நீலகந்தர ஸதா த்வாம்மே மனஶ் சாதக: ॥

ஹே மங்களத்தை அளிப்பவனே! நீலகண்டனுகிய நீருண்ட மேகமாகிய உன்னை என் மனமாகிய சாதகபக்ஷி எப்பொழுதும் இச்சிக்கிறது. நீ காருண்யம் என்ற அம்ருதத்தை வர்ஷிக்கிருய். என்னுடைய பெரிய கஷ்டங்களாகிய தாபத்தைப் போக்குவதில் திறமுள்ளவனுக இருக்கிருய். வித்தை என்னும் பயிரை வளர்க்கும் பொருட்டு தேவர்களாலும், நன் மக்களாலும் ஸேவிக்கப் பட்டவனுக இருக்கிருய். இச்சைக்குத் தகுந்தபடி உருவமெடுத்துக் கொள்கிருய். நர்த்தனம் செய்கிற பக்த கோடிகளாகிய மயில்களை உடையவனுக இருக்கிருய். மலையில் வஸிக்கிருய். அசைகின்ற ஜடைகளின் கூட்டமாகிய மின்னல்களை யுடையவனுக இருக்கிருய்.

आकाशेन शिखी समस्तफणिनां नेत्रा कलापी नता-
नुग्राहि प्रणवोपदेशनिनदैः केकीति यो गीयते ।

श्यामां शैलसमुद्भवां घनरुचिं दृष्ट्वा नटन्तं मुदा
वेदान्तोपवने विहाररसिकं तं नीलकण्ठं भजे ॥ ५३

ஆகாஶேன சிகீ ஸமஸ்த பணினும் நேத்ராகலாபீ நதா-
னுக்ராஹி ப்ரணவோபதேஶ ஙினதை: கேகீதி யோகீயதே ।
ஶ்யாமாம் ஶைல ஸமுத்பவாம் கனருசிம்த்ருஷ்ட்வாநடந்தம்முதா
வேதாந்தோபவனே விஹாரரஸிகம் தம் நீலகண்டம்பஜே ॥

ஆகாசமென்னும் கொண்டையையுடையவனும் நாகங்களுக்குத் தலைவனை ஆபரணமாக அணிபவனும், நமஸ்கரிப்பவர்களை அனுக்ரஹிக்கும் ப்ரணவ த்வனியாகிற 'கே கா' சப்தத்தை உடையவனும், பர்வதராஜனின் புத்ரியும் மேகத்தின் காந்தியையுடைய பார்வதி தேவியைப்பார்த்து ஆனந்தத்துடன் நடனம் செய்பவனும் வேதாந்தம் என்கிற உத்யான வனத்தில் விளையாடுவதில் விருப்பம் மிக்கவனுமான நீலகண்டன் என்ற மயிலை பஜிக்கிறேன்.

संध्या घर्मदिनात्ययो हरिकराघातप्रभूतानक-
ध्वानो वारिदगर्जितं दिविषदां दृष्टिच्छटा चञ्चला ।
भक्तानां परितोषबाष्पविततिर्वृष्टिर्मयूरी शिवा
यस्मिन्नुज्ज्वलताण्डवं विजयते तं नीलकण्ठं भजे ॥ ५४

ஸந்த்யா கர்மதிநாத்யயோ ஹரிகராகாதப்ரபூதானக
த்வானோ வாரிதகர்ஜிதம் திவிஷதாம் த்ருஷ்டிச்சடா சஞ்சலா ।
பக்தானும் பரிதோஷபாஷ்பவிததிர்வ்ருஷ்டிர்மயூரீ ஶிவா
யஸ்மின்னுஜ்ஜ்வலதாண்டவம்விஜயதேதம் நீலகண்டம்பஜே

ஸந்த்யா என்பது கோடைகாலத்தின் முடிவாகவும் மஹா விஷ்ணுவினல் அடிக்கப்பட்டு உண்டாகிற ஶப்தமே

மேகங்களின் கர்ஜனையாகவும் தேவர்களின் கண்களின் வரிசையே மின்னலாகவும் பக்தர்களின் ஆனந்தக்கண்ணீர்ப் பெருக்கே மழையாகவும் பார்வதி தேவியே பெண் மயிலாகவும் கொண்டு எவரிடத்தில் ஜாஜ்வல்யமான தாண்டவம் சிறந்து விளங்குகின்றதோ அந்த நீலகண்டன் என்ற மயிலை நான் பஜிக்கிறேன்.

आद्यायामिततेजसे श्रुतिपदैर्वेद्याय साध्याय ते
विद्यानन्दमयात्मने त्रिजगतः संरक्षणोद्योगिने ।
ध्येयायाखिलयोगिभिः सुरगणैर्गेयाय मायाविने
सम्यक्ताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शंभवे ॥ ५५

ஆத்யாயாமிததேஜஸே ஶ்ருதி பதைர் வேத்யாய ஸாத்யாயதே
வித்யானந்த மயாத்மனே த்ரிஜகத: ஸம்ரக்ஷணோத்யோகினே ।
த்யேயாயாகில யோகிபி: ஸுரகணைர் கேயாய மாயாவினே
ஸம்யக்தாண்டவ ஸம்ப்ரமாய ஜடினே ஸேயம் நதி:சம்பவே ॥

எல்லா ஜகத்துக்கும் ஆதிகாரணமானவனும், அளவுக்கடங்காத தேஜஸ் உடையவனும், வேதங்களினலே அறியப்படுபவனும், தேடி அடையவேண்டிய பொருளாக இருப்பவனும் ஞானம் ஆனந்தம் என்பவைகளாக இருப்பவனும், மூன்று லோகங்களையும் ரக்ஷிப்பதில் தீர்மானம் உடையவனும், யோகிகளுடைய த்யானத்திற்கு லக்ஷியமாக அமைந்தவனும், தேவர்களுடைய கூட்டங்களினலே ஸ்தோத்திரம் செய்யப்படுபவனும், மாயையைத் தன் வசத்தில் வைத்திருப்பவனும், நன்ருகத் தாண்டவம் செய்வதிலே விருப்பம் உள்ளவனுகவும் இருக்கிற ஜடைகள் தரித்த சம்புவே! என்னுடைய இந்த நமஸ்காரம் உன் பொருட்டு ஆகட்டும்.

नित्याय त्रिगुणात्मने पुरजिते कात्यायनीश्रेयसे
सत्यायादिकुटुम्बिने मुनिमनःप्रत्यक्षचिन्मूर्तये ।
मायासृष्टजगत्त्रयाय सकलाम्नायान्तसंचारिणे
सायंताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शंभवे ॥ ५६

நித்யாய த்ரிகுணாத்மனே புரஜிதே காத்யாயனீ ஶ்ரேயஸே
ஸத்யாயாதி குடும்பினே முனிமன: ப்ரத்யக்ஷ சின் மூர்த்தயே ।
மாயா ஸ்ருஷ்ட ஜகத்த்ரயாய ஸகலாம்ஞயாந்த ஸஞ்சாரிணே
ஸாயம் தாண்டவ ஸம்ப்ரமாய ஜடினே ஸேயம் நதி:ஶம்பவே ॥

நித்யமானவனும், மூன்று குணங்களை சரீரமாக உடையவனும், முப்புரங்களை ஜெயித்தவனும், பார்வதீ தேவிக்கு ஶ்ரேயஸ்ஸாகயிருப்பவனும், ஸத்யஸ்வரூபனும் ஆதி குடும்பியும், முனிவர்களுடைய மனத்திலே ப்ரத்யக்ஷ மாக விளங்குகின்ற ஞான ஸ்வரூபனும், மாயையினலே மூன்று உலகையும் ஸ்ருஷ்டித்தவனும், ஸகல உபநிஷத்துக் களில் ஸஞ்சரிக்கின்றவனும், சாயங்காலத்தில் தாண்டவம் செய்வதில் விருப்பமுள்ளவனுகவும், ஜடாதாரியாகவும் இருக்கின்ற அப்படிப்பட்ட சம்புவின் பொருட்டு இந்த நமஸ்காரம் ஆகட்டும்.

नित्यं स्वोदरपूरणाय सकलानुद्दिश्य वित्ताशया
व्यर्थं पर्यटनं करोमि भवतः सेवां न जाने विभो ।
मज्जन्मान्तरपुण्यपाकफलतस्त्वं शर्व सर्वान्तर-
